நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2025 – 2026

மானியக் கோரிக்கை எண். 21

எ.வ. வேலு

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

Verified RealEstate ™

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம்
1	முகவுரை	1
2	நிர்வாக அமைப்பு	15
3	பெரும் திட்டங்கள்/பணிகள்	39
3.1	மாநில நிதித்திட்டங்கள்/பணிகள்	39
3.1.1	ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)	39
3.1.1.1	முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத்திட்டம் (CMRDP)	42
3.1.1.2	உயர்மட்டப் பாலங்கள் அமைத்தல்	44
3.1.1.3	உங்கள் தொகுதியில் முதலமைச்சர்	46
3.1.1.4	உயர்மட்டச் சாலைகள்	48
3.1.1.5	சாலை சந்திப்பு மேம்பாலங்கள்	49
3.1.1.6	புறவழிச்சாலைகள்/ இணைப்புச் சாலைகள் அமைத்தல்	50
3.1.1.7	நகர்ப்புறப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துதல்	52
3.1.1.8	பேரிடர் மேலாண்மை செயல்பாடுகள்	54

Verified RealEstate™

வ. எண்	பொருள்	பக்கம்
3.1.1.9	சாலை வகைப்பாடுகள் வாரியாக ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் விவரம்	58
3.1.1.10	மாவட்ட இதர சாலைகள் – சிறப்புக் கூறு திட்டம்	61
3.1.1.11	சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம்	63
3.1.2	சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)	64
3.2	ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதரச் சாலைகளாக தரம் உயர்த்துதல்	69
3.3	இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் அமைத்தல்	70
3.4	பராமரிப்புப் பணிகள்	73
3.5	ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்	75
3.6	வைப்பு நிதி பணிகள்	78
3.7	பாலங்களின் கட்டமைப்புக்கான வடிவமைப்பு	79

Verified RealEstate™

வ. எண்	பொருள்	பக்கம்
3.8	தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள்	81
4	பன்னாட்டு நிதியுதவி திட்டங்கள்	87
4.1	தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– II	87
4.2	சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம்	88
4.3	சென்னை எல்லை சாலைத் திட்டம்	91
5	சாலைப் பாதுகாப்பு	96
6	ஆராய்ச்சி, பரிசோதனைகள், தரக்கட்டுப்பாடு மற்றும் பயிற்சி	107
7	தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்	116
8	தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்	120
9	தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்	123
10	தமிழ்நாடு கடல்சார் வாரியம்	126
11	பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்	142
12	முன்னெடுப்புகள்	149
13	வரவு செலவு திட்ட மதிப்பீடு	151

Verified RealEstate™

Verified RealEstate™

1. முகவுரை

ஒரு மாநிலத்தின் வளர்ச்சியானது அதன் புவியியல் அமைவிடம், இயற்கை வளங்கள், மனித வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றை சார்ந்தே உள்ளது. பல்வேறு வளர்ச்சிகள் இருந்தாலும், ஒரு இடத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக சாலை உள்கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன. விவசாயம், தொழில், சுற்றுலா போன்ற முக்கிய துறைகள் சாலை கட்டமைப்பைச் சார்ந்துள்ளன. பாதுகாப்பான, நம்பகமான மற்றும் சிறப்பான போக்குவரத்து மூலம் மக்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லவும் பொருட்கள் மற்றும் வணிகப் பொருட்களை எடுத்துச் செல்லவும் முடிகிறது. சாலைக் கட்டமைப்புப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் சமூக வளர்ச்சியிலும் பெரும்பங்கு வகிக்கிறது.

Verified RealEstate™

வாழ்க்கைத் தர உயர்வு, வளர்ச்சிக் குறியீடுகள் மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவை சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசின் உறுதியான நிலைப்பாட்டிற்கு சான்றாக உள்ளன.

தமிழ்நாடு, 1076 கிலோமீட்டர் நீளம் கொண்ட, நாட்டிலேயே இரண்டாவது நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது. 3 பெரிய துறைமுகங்கள் மற்றும் 17 சிறிய துறைமுகங்களுடன், தமிழ்நாடு, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக மையங்களில் குறிப்பிடத்தக்க வர்த்தக திறன்களைக் கொண்டுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் துறைமுகம் சார்ந்த தொழில் துறைகளை ஊக்குவிப்பதற்காக இந்த உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

1.1 நெடுஞ்சாலைகள்

சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சாலை பயனாளர்களுக்காக போக்குவரத்து

Verified RealEstate™

முறைமையை மேம்படுத்துவதில் நெடுஞ்சாலைத் துறை முக்கிய பொறுப்பு வகிக்கிறது. போக்குவரத்து செறிவினைப் பொறுத்து திறனை மேம்படுத்துதல், நெடுஞ்சாலை அமைப்பிற்குள் இணைப்பு, செயல்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவை துறையின் நோக்கங்களாகும். தற்போதுள்ள சாலைகளைத் தரம் உயர்த்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், உயர்மட்டப் பாலங்கள், சாலை சந்திப்பு மேம்பாலங்கள், உயர்மட்டச் சாலைகள், இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள், வாகன சுரங்கப் பாதைகள், நடைமேம்பாலங்கள் கட்டுதல், சாலைப் பாதுகாப்பு, தற்போதுள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரித்தல் மற்றும் மனித வளத் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

அனைத்துப் பகுதிகளையும் இணைத்தல், போக்குவரத்து செறிவு மற்றும் இடத்தின்

முக்கியத்துவம் போன்ற காரணிகளின் அடிப்படையில் சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகள் (NH): மாநில தலைநகரங்கள், முக்கிய துறைமுகங்கள், முக்கிய நகரங்கள் மற்றும் நகர்ப்புறங்களை இணைக்கிறது. இவை போக்குவரத்துக் கட்டமைப்பின் முக்கிய கூறுகளாக செயல்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகள், ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MoRTH) கட்டுப்பாட்டில் உள்ளன.

மாநில நெடுஞ்சாலைகள் (SH): மாநிலத் தலைமையிடங்கள், மாவட்டத் தலைநகரங்கள், நகரங்கள், சுற்றுலாத் தலங்கள், தொழிற்சாலை மையங்கள் போன்றவற்றை இணைக்கிறது.

மாவட்ட முக்கியச் சாலைகள் (MDR): மாவட்ட தலைமையகத்தை முக்கிய நகரங்கள், கிராமப்புறங்கள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைக்கிறது.

Verified RedEstate

மாவட்ட இதர சாலைகள் (ODR): விற்பனை மையங்கள், உற்பத்தி மையங்கள், வட்டம் அல்லது வட்டார தலைமையிடங்கள் போன்றவற்றை இணைக்கும் சாலைகளை இணைக்கிறது.

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் ஆகியவை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன.

மாநில வரம்பிற்குள் உள்ள பல்வேறு சாலை வகைப்பாடுகளின் கீழ் உள்ள சாலைகளின் நீளம் மற்றும் சாலை வழித்தடங்களின் விவரங்கள் பின்வருமாறு;

Verified RealEstate

சாலைகளின் வகைப்பாடு		நீளம் (கி.மீ)
தேசிய நெடுஞ்சாலைகள்	தேசிய நெடுஞ்சாலைகள் அலகு	1677
	இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்	5128
	மொத்தம்	**6805**
மாநில நெடுஞ்சாலைகள்		12625
மாவட்ட முக்கிய சாலைகள்		11994
மாவட்ட இதர சாலைகள்		43531
சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ தவிர)		**68150**
சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ சேர்த்து)		**74955**

Verified RealEstate™

வகைப்பாடு	ஒரு வழித்தடம்	இடை வழித்தடம்	இரு வழித்தடம்	கடின புருவங்களுடன் கூடிய இரு வழித்தடம்	நான்கு வழித்தடம்	ஆறு வழித்தடம்	எட்டுவழித்தடம்	மொத்தம்
நீளம் (கி. மீ)								
தேசிய நெடுஞ் சாலைகள்	–	–	974	2311	3101	398	21	6805
மாநில நெடுஞ் சாலைகள்	43	319	6667	3284	2053	259	–	12625
மாவட்ட முக்கிய சாலைகள்	658	4587	6154	494	93	8	–	11994
மாவட்ட இதர சாலைகள்	33819	7933	1619	139	17	4	–	43531
மொத்தம்	34520	12839	15414	6228	5264	669	21	74955

Verified RedEstate™

நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் பாலங்களின் விவரம் பின்வருமாறு;

வ. எண்	பாலங்களின் வகைகள்	எண்ணிக்கை
1	குறு பாலங்கள்	135101
2	சிறு பாலங்கள்	8543
3	பெரிய பாலங்கள்	1047
4	சாலை சந்திப்பு மேம்பாலங்கள்	77
5	இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள்	157
6	இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே கீழ்ப்பாலங்கள்	92
7	பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள்	15
8	நடை மேம்பாலங்கள்	10
	மொத்தம்	**145042**

Verified RedEstate



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையை விவேகானந்தர் நினைவு பாறையுடன் இணைக்கும் கடல்சார் கண்ணாடி பாலத்தை 30.12.2024 அன்று திறந்து வைத்தார்–கன்னியாகுமரி மாவட்டம்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.12.2024 அன்று திறந்து வைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையை விவேகானந்தர் நினைவு பாறையுடன் இணைக்கும் கடல்சார் கண்ணாடி பாலத்தின் எழில்மிகு தோற்றம்– கன்னியாகுமரி மாவட்டம்

VerifiedRealEstate™

1.2 சிறு துறைமுகங்கள்

1076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ள தமிழ்நாட்டில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. 17 சிறு துறைமுகங்கள் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன.

1.3 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956–இன் படி நிறுவப்பட்டது. மின்சார உற்பத்திக்காக நிலக்கரியை எடுத்துச் செல்வது இதன் முக்கிய பணியாகும். சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு படகுப் போக்குவரத்தும் இயக்கப்படுகிறது. மேலும், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வட்டக்கோட்டைக்கும் படகுப் போக்குவரத்தினை இயக்கி வருகிறது.

Verified PadEstate

1.4 நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDGs)

2015–ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபை 2030–ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) நிர்ணயித்துள்ளது. மேற்கண்ட இலக்குகள், பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் என முப்பரிமாணங்களில் நீடித்த வளர்ச்சியுடன் சமநிலை மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையில் தொடர்புடையவையாக உள்ளன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய அனைத்து துறைகளின் செயல்திறனை கண்காணிக்க, தமிழ்நாடு அரசு மாநில அளவிலான இலக்குகள் மற்றும் குறியீடுகளை வகுத்துள்ளது. கீழ்க்கண்ட இலக்குகளுடன் தொடர்புடைய சிறப்புக் குறியீடுகள் நெடுஞ்சாலைத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

Verified RedEstate

<u>குறிக்கோள் 3.6:</u> 2020–ஆம் ஆண்டிற்குள் சாலைப் போக்குவரத்தால் நிகழும் சாலை விபத்துகள் மற்றும் உயிர் இழப்புகளைப் பாதியாகக் குறைத்தல்.

இந்த இலக்கினை அடைய, உள்துறை, போக்குவரத்து, நெடுஞ்சாலை, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளின் பங்களிப்புடன் ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

<u>இலக்கு 9 – தொழில்மயமாக்கல், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உள்கட்டமைப்பை உருவாக்குதல் – நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாதலை மேம்படுத்தும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.</u>

<u>குறிக்கோள் 9.1:</u> அனைவரும் பெறத்தக்க வகையிலான தகுந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்வாழ்வினை மக்களுக்கு அளிப்பதற்கான மண்டலம்

மற்றும் எல்லை மண்டலங்களுக்கிடையேயான தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளத்தை உறுதி செய்யும் வகையில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதே இந்த இலக்கின் நோக்கமாகும்.

பல்வேறு திட்டங்களின் வாயிலாக சாலைகளின் இணைப்பு மற்றும் திறனை மேம்படுத்துவதன் மூலம் சாலை உள்கட்டமைப்பு வசதிகளை நெடுஞ்சாலைத் துறை மேம்படுத்தி வருகிறது.

மேலே உள்ள குறிகாட்டியின் செயல்திறன் பின்வருமாறு;

Verified RealEstate ™

வ. எண்.	குறியீடுகள்	வருடம்		
		2015 (அடிப்படை ஆண்டு)	2023	2024
1	9.1.1ஆ–மொத்த மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் (கி.மீ.)	12093	12349	12625
2	9.1.1ஆ.1–மாநில நெடுஞ்சாலைகளில் நான்கு வழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	–	16.71	18.31
3	9.1.1இ–மாவட்ட முக்கிய சாலைகளின் நீளம் (கி.மீ.)	11617	12034	11994
4	9.1.1இ.1–மாவட்ட முக்கிய சாலைகளில் இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	27.23	53.81	56.27

Verified RedEstate™

வ. எண்.	குறியீடுகள்	வருடம்		
		2015 (அடிப்படை ஆண்டு)	2023	2024
5	9.1.1.ஈ–மாவட்ட இதர சாலைகளின் நீளம் (கி.மீ.)	33756	42833	43531
6	9.1.1.ஈ.1–மாவட்ட இதர சாலைகளில் உள்ள இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	2.51	3.94	4.09
7	9.1.1ஈ.2–மாவட்ட இதர சாலைகளில் உள்ள ஒருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	88.01	78.31	77.69

வெவ்வேறு வகைப்பாடுகளில் உள்ள சாலைகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் சாலைகளின் திறனை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Verified RealEstate™

2. நிர்வாக அமைப்பு

இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1946–ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத்துறைக்கென ஒரு தனித்துறை உருவாக்கப்பட்டது. அதற்கு முன்பு, இத்துறை பொதுப்பணித் துறையின் ஒரு பகுதியாக இருந்தது, பின்னர் ஒரு தனித்துவமான துறையாக உருவாக்கப்பட்டது. 1996–ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கு அரசு செயலாளர் என்ற புதிய பதவி தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் இத்துறையின் கீழ் சிறு துறைமுகங்கள் கொண்டு வரப்பட்டு, துறையானது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

75 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வரும் நெடுஞ்சாலைத் துறைக்கு, 2022–ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

Verified RealEstate

முன்னிலையில் 75–வது ஆண்டு பவள விழா கொண்டாடப்பட்டு எண்ணற்ற பாராட்டுகள் பெறப்பட்டுள்ளன.

திறம்பட திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு போன்றவை சாலைகள், பாலங்கள், புறவழிச்சாலைகள், சாலை சந்திப்பு மேம்பாலங்கள், உயர்மட்டச் சாலைகள், இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள், நடை மேம்பாலங்கள், பாதசாரி சுரங்கப்பாதைகள் மற்றும் குறு பாலங்கள் போன்ற கட்டுமானங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவைகளாகும். மேற்கண்ட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகள் நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகள் மூலம் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

Verified RealEstate ™

16 A



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.10.2024 அன்று திறந்து வைக்கப்பட்ட நாமக்கல் புறவழிச்சாலையின் தோற்றம்.

நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு;

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

அலகுகள்

- முதன்மை இயக்குநர்
- கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
- தேசிய நெடுஞ்சாலை
- நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்
- திட்டங்கள்
- பெருநகரம்
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்
- திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II
- சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம்/ சென்னை எல்லை சாலைத் திட்டம்

நிறுவனங்கள்/ கழகங்கள்/ ஆணையம்/வாரியம்

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்
- தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்
- தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்
- தமிழ்நாடு கடல்சார் வாரியம்
- பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

Verified RedEstate

2.1 செயல்பாடுகள்

2.1.1 முதன்மை இயக்குநர் அலுவலகம்

இவ்வலகு, முதன்மை இயக்குநரின் தலைமையின் கீழ் 3 இணை இயக்குநர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர் நிலையில் உள்ள ஒரு முதன்மை அலுவலர் (தகவல் தொழில்நுட்பம்) ஆகியோர்களுடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வலகின் செயல்பாடுகள்;

- துறையின் பிற அலகுகள் மற்றும் பிற துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு.
- நிர்வாகம்.
- துறையின் ஒட்டுமொத்த பணியமைப்பு தொடர்பான நடவடிக்கைகள்.
- துறையின் இணையதளங்களை பராமரித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முயற்சிகள்.
- தரக்கட்டுப்பாடு தொடர்பான பிரச்சனைகளைக் கண்காணித்தல்.

Verified RealEstate

- பின்வரும் தொழில்நுட்ப குழுக்களுக்கு தலைவர்/உறுப்பினராகச் செயல்படுதல்.

பொறியாளர்கள் குழுமம் (BoE)

இது தொழில்நுட்பம் மற்றும் இதர முக்கிய பொருள் தொடர்பான கொள்கை அளவில் முடிவுகள் எடுக்க அதிகாரம் கொண்ட தொழில்நுட்ப அமைப்பாகும். இக்குழுமம் முதன்மை இயக்குநர் தலைமையில் அனைத்துத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவாகும்.

ஒப்பந்தப்புள்ளி ஆணையம் (CoT)

முதன்மை இயக்குநர் தலைமையில் நிதித்துறையின் அரசு துணைச் செயலாளர், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மற்றும் கருத்துருக்களை சமர்ப்பிக்கும் சம்பந்தப்பட்ட அலகின் தலைமைப் பொறியாளர்

ஆகியோர் அடங்கிய குழுவாகும். இக்குழு, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான ஒப்புதலை வழங்குகிறது.

உயர்மட்ட முரண் தீர்வுக் குழு (HLDRC)

முதன்மை இயக்குநர் தலைமையில் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– II, இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நிதித்துறை மற்றும் சட்டத் துறையிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவாகும். சர்ச்சைக்கு தீர்வு காணவேண்டிய அலகின் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்(நெ) இக்குழுவின் அமைப்பாளராகச் செயல்படுவார். திட்டப்பணிகளில் எழும் ஒப்பந்த முரண்பாடுகளை விரைந்து தீர்க்க இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது .

திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான குழு (RASC)

இக்குழு, முதன்மை இயக்குநர், சம்பந்தப்பட்ட பணியின் தலைமைப் பொறியாளர், தலைமைப்

பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு), அரசு துணைச் செயலாளர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை) மற்றும் நிதித் துறை அரசு துணைச் செயலாளர் ஆகியோர்களைக் கொண்ட குழுவாகும். இக்குழு திருத்திய நிர்வாக ஒப்புதல் தேவைப்படும் பணிகளில் ஏற்படும் மாறுதல்களைக் கூர்ந்தாய்வு செய்து அதனைத் திருத்திய நிர்வாக ஒப்புதலுக்காக அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

தொழில்நுட்பத் தணிக்கை குழு (TAC)

முதன்மை இயக்குநர், இயக்குநர் (நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்) மற்றும் அனைத்துத் தலைமைப் பொறியாளர்களை உள்ளடக்கிய இக்குழு, திட்டமுன்மொழிவுகளுக்குத் தொழில்நுட்பம் குறித்த ஆலோசனைகளை வழங்குகிறது.

பணி நியமனங்கள்

2024–25–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 52 உதவிப் பொறியாளர்கள்,

3 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 3 தணிக்கை உதவியாளர்கள், 182 உதவியாளர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் உயர்மட்ட தேர்வு குழுவினால் தகுதி வாய்ந்த விளையாட்டு வீரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 4 உதவியாளர்கள் ஆகியோருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2.1.2 கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

இவ்வலகு தலைமைப் பொறியாளரின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் 10 வட்டங்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 49 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

மாநில நெடுஞ்சாலைத் துறையின் கீழ் உள்ள அனைத்து சாலைகளும் இவ்வலகின் மேற்பார்வையில் உள்ளது.

- தற்போதுள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரித்தல்.

- சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப் படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- சிறப்பு / அவசர வெள்ளச் சீரமைப்புப் பணிகள்.
- சாலைப் பாதுகாப்பு பணிகள்.
- புறவழிச்சாலைகள் அமைத்தல்.
- உயர்மட்டச் சாலைகள் / சாலை சந்திப்பு மேம்பாலங்கள் கட்டுதல்
- உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்.

2.1.3 தேசிய நெடுஞ்சாலைகள்

இவ்வலகு, தலைமைப் பொறியாளரின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் 3 வட்டங்கள், கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 9 கோட்டங்கள் மற்றும் 3 தரக்கட்டுப்பாடு கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் முகமையாகச் செயல்படும் இவ்வலகு தேசிய நெடுஞ்சாலையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

- அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் உட்பட, தேசிய நெடுஞ்சாலைகளைத் தரம்

Verified RedEstate ™

உயர்த்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகளின் மூலம் விபத்து கரும்புள்ளிகள் மற்றும் விபத்துக் கரும்புள்ளிகளாக மாற வாய்ப்புள்ள பகுதிகளைச் சரிசெய்தல்.

- முக்கிய நகரங்கள்/ நகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச்சாலைகள் அமைத்தல்.

- சாலை மேம்பாலங்கள்/ வாகன சுரங்கப் பாதைகள், உயர்மட்டப் பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.

- தேசிய நெடுஞ்சாலைகளை குறுகிய கால பராமரிப்பு ஒப்பந்தம் (STMC) (ம) செயல் திறன் அடிப்படையிலான ஒப்பந்தம் (PBMC) மூலம் பராமரித்தல்.

- தடையில்லாத சீரான போக்குவரத்திற்காக சாலைகளைக் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்தல்.

- பருவ மழைக்காலங்களில் உண்டாகும் வெள்ளச் சேதங்களைச் சீரமைக்கும் பணிகள்

Verified RedEstate ™

2.1.4 நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்

இவ்வலகு, தலைமைப் பொறியாளரின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் 4 வட்டங்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 14 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) கடன் உதவி மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்.
- மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி கடனுதவியுடன் ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துதல்.
- இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.
- மாநில நிதியின் கீழ் புறவழிச்சாலைகள் அமைத்தல்.

Verified RealEstate

2.1.5 திட்டங்கள்

இவ்வலகு, தலைமைப் பொறியாளரின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் 3 வட்டங்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 10 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

- இரயில்வே திட்டப்பணிகள் மற்றும் மாநில நிதித் திட்டங்களின் கீழ் இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டுதல்.
- உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல் / திரும்பக் கட்டுதல்
- போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சாலை மேம்பாலங்கள் மற்றும் உயர்மட்டச் சாலைகள் கட்டுதல்.
- சீரான போக்குவரத்திற்கு ஏதுவாக புறவழிச் சாலைகள் / இணைப்புச் சாலைகள் அமைத்தல்.

Verified RealEstate

2.1.6 பெருநகரம்

தலைமைப் பொறியாளரின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் 1 வட்டம் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 4 கோட்டங்களுடன் செயல்பட்டு வரும் இவ்வலகு சென்னைப் பெருநகர பகுதிக்குள் (CMA) பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

- சாலை சந்திப்பு மேம்பாலங்கள் / வாகன சுரங்கப்பாதைகள் / உயர்மட்டச் சாலைகள் கட்டுதல்.
- உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்.
- சாலைகள் / பாலங்களை அகலப்படுத்துதல்.
- புதிய இணைப்புச் சாலைகள் மற்றும் புறவழிச்சாலைகள் அமைத்தல்.
- நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலங்கள் கட்டுதல்.

Verified RealEstate

- இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதைகள் கட்டுதல்/ அகலப்படுத்துதல்.

2.1.7 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநரின் தலைமையில்

1 இணை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், பரிசோதனை மற்றும் ஆராய்ச்சிக்காக 4 துணை இயக்குநர்கள், தரக்கட்டுப்பாட்டிற்காக 10 கோட்டப் பொறியாளர்கள்

1 இணை இயக்குநர், பயிற்சி மையம் மற்றும் பயிற்சிக்காக 2 துணை இயக்குநர்கள்,

1 கண்காணிப்புப் பொறியாளர், சாலைப் பாதுகாப்பு அலகு மற்றும் 8 கோட்டப் பொறியாளர்கள், சாலைப் பாதுகாப்பு ஆகியோருடன் செயல்பட்டு வருகிறது.

- மேம்பட்ட பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சி.

Verified RedEstate ™

- நெடுஞ்சாலை கட்டுமானப் பொருட்கள் மீது சோதனை
- சாலைகள், பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பாகத் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- தரக் கட்டுப்பாடு.
- சாலைப் பாதுகாப்பு.
- மேம்பட்ட பயிற்சிகள் மூலம் மனித வளத் திறனை மேம்படுத்துதல்.

2.1.8 திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், 1 இணைத் தலைமைப் பொறியாளர் மற்றும் 4 கோட்டப் பொறியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

- கட்டுமான மதிப்பு ரூ.2 கோடிக்கு மேலான ஆற்றுப் பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே கீழ்ப் பாலங்கள், சாலை சந்திப்பு மேம்பாலங்கள், நடைமேம்பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலையின்

Verified RedEstate™

இதர கட்டுமானங்களுக்கும் வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தயாரித்து ஒப்புதல் அளித்தல்.

- துறையின் பல்வேறு அலகுகள் மற்றும் பிற அரசுத்துறைகளால் ஈடுபடுத்தப்பட்ட ஆலோசகர்கள் மூலம் தயாரிக்கப்படும் வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்களைச் சரிபார்த்து ஒப்புதல் வழங்குதல்.

- மிகப்பெரிய கனரக வாகனங்கள் பாலங்களில் செல்ல அனுமதி வழங்குவதற்கான தொழில்நுட்பப் பரிந்துரைகள் வழங்குதல்.

2.1.8.1 பாலங்கள் சிறப்பு ஆய்வு அலகு

இவ்வலகு, தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அவர்களின் கட்டுப்பாட்டில் ஒரு கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் 4 கோட்டப் பொறியாளர்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

Verified RedEstate™

- மாநிலம் முழுவதும் உள்ள உயர்மட்ட பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள், நடை மேம்பாலங்கள், சாலை சந்திப்பு மேம்பாலங்கள் மற்றும் உயர்மட்டச் சாலைகள் ஆகியவற்றை சீரான கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, பாலத்தின் நிலை குறித்து அறிக்கை தயாரித்து அதன் அடிப்படையில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை இறுதி செய்து சம்பந்தப்பட்ட செயலாக்க அலகுக்கு பரிந்துரைத்தல்.

- அனைத்து புதிய பாலங்களுக்கான கருத்துருக்களை கூராய்வு செய்தல்.

2.1.9 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II (TNRSP II)

இந்த அலகானது ஒரு திட்ட இயக்குநர், ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ், கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் 1 வட்டம் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 5 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

Verified RealEstate™

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– II , ஆனது பன்னாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு முழுவதும் முக்கியச் சாலைகளில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2.1.10 சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம் (CKICP)

இவ்வலகானது, ஒரு திட்ட இயக்குநர் மற்றும் ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ், கண்காணிப்புப் பொறியாளர்களின் தலைமையில் 2 வட்டங்களுடன் மற்றும் கோட்டப் பொறியாளர்களின் தலைமையில் 6 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் 589 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை மேம்பாடு செய்து பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Verified RealEstate

32 A



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாலங்களின் மேற்கட்டுமானத்திற்கான வரைப்பட புத்தகங்களை 26.07.2024 அன்று வெளியிட்டார்

Verified by eGistore ™

32 B



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 14.08.2024 அன்று உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

Verified RealEstate ™

2.1.11 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) மற்றும் தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை லிமிடெட் (ITEL) ஆகியவை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் செயலாளரின் தலைமையின் கீழ் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்(TIDCO), TIDEL ஆகியவற்றின் உறுப்பினர்கள், அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் மற்றும் தனி இயக்குநர்களைக் கொண்ட இயக்குநர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை லிமிடெட் நிறுவனங்கள், நிர்வாக இயக்குநர், தலைமைப் பொது மேலாளர், பொது மேலாளர்கள்/ கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்கள் ஆகியோரைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது.

Verified RealEstate™

இந்த நிறுவனம் சில சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்துகிறது;

- கிழக்கு கடற்கரை சாலையின் அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான ஒப்பந்ததாரர் (Concessionaire).
- திட்ட மேலாண்மை முகமையாகச் செயல்படும் திட்டங்கள் :
    - சென்னை வெளிவட்ட சாலை – இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள்.
    - சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு–1 மற்றும் பிரிவு–5.

2.1.12 தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC)

அரசு செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆவார். இந்நிறுவனம் தலைமைப் பொறியாளர் நிலையில் உள்ள செயல் இயக்குநர் அவர்களால் 1 கண்காணிப்புப்

பொறியாளர் மற்றும் 3 கோட்டப் பொறியாளர்களுடன் நிர்வகிக்கப்படுகிறது.

மாநில மற்றும் பன்னாட்டு நிதியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்குச் செயலாக்க நிறுவனமாக / மேலாண்மை முகமையாகச் செயல்படுகிறது:

- சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் (பிரிவு II, III, மற்றும் IV).
- மதுரை சுற்றுச்சாலை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
- சிங்கப்பெருமாள் கோயில் அருகே இரயில்வே கடவு எண். 47–க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி.
- ஓரகடம் தொழிற் பூங்கா சாலைப் பணிகள்.

Verified RealEstate

2.1.13 தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் (TANSHA)

நான்கு வழித்தடச் சாலைகள் மற்றும் அதிவேகச் சாலைகள் உள்பட பெரும் சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களை பொது தனியார் பங்களிப்பு மூலமாகச் செயல்படுத்த, தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையச் சட்டம் 12/2024–இன் படி 2024–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

பின்வரும் வகையிலான உள்கட்டமைப்புத் திட்டங்கள் இந்த ஆணையத்தின் மூலம் செயலாக்கப் பட உள்ளது:

- நெடுஞ்சாலை வளர்ச்சியில் பொது–தனியார் பங்களிப்பு (Public Private Partnership–PPP) முயற்சிகள்.
- நான்குவழிச்சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகள் அமைத்தல்.
- விமான நிலையம், துறைமுகங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான சாலை இணைப்பை மேம்படுத்துதல்.

Verified RealEstate™

2.1.14 தமிழ்நாடு கடல்சார் வாரியம் (TNMB)

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களின் தலைமையில் செயல்படுகிறது.

சீரிய வசதிகள், சேவைகள் அளிப்பதன் மூலம் தென் மாநிலங்களில் அதிகரித்து வரும் கடல் சரக்குப் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்தல், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகத்திற்கு ஆதரவு அளித்தல்.

2.1.15 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் (PSCL)

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம், 1956-இன்படி நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசின் நிறுவனமாகும்.

Verified RealEstate

இக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு;

- இந்தியாவின் கிழக்கு கடல் வழியாக நிலக்கரி எடுத்து வருதல்.
- கன்னியாகுமரி மற்றும் வட்டக்கோட்டையில் பயணிகள் படகுப் போக்குவரத்து.

Verified RealEstate

3. பெரும் திட்டங்கள்/ பணிகள்

பொருட்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்யும் நோக்கில், சாலைகளை அமைத்து பராமரித்தல் நெடுஞ்சாலைத் துறையின் முக்கிய பணியாகும். இந்த நோக்கத்திற்கேற்ப அனைத்துத் திட்டங்கள் மற்றும் பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

3.1 மாநில நிதித் திட்டங்கள்/ பணிகள்

3.1.1 ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், 2005–2006–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு குறிப்பிடத்தக்க திட்டமாகும். இத்திட்டம், சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் மூலம் அவற்றின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாலையின் மேற்பரப்புகளை

Verified RealEstate

மேம்படுத்துவதன் மூலம், வாகன தேய்மானம் குறைக்கப்படுவதால் சாலைப் பயனாளர்கள் பயனடைகின்றனர். பெருகிவரும் போக்குவரத்து செறிவைக் கருத்தில் கொண்டும் மற்றும் சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும் சாலையினை அகலப்படுத்துதல் முக்கியமானதாகிறது. தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பை உறுதிப்படுத்துதல் / மேம்படுத்துதல் மூலம் சாலை உள்கட்டமைப்புகளின் ஆயுட்காலம் அதிகரிப்பதுடன், அதன் மதிப்பும் அதிகரிக்கிறது. இத்திட்டம் சிறந்த சேவைத்திறன் மற்றும் சாலை பயனாளர்களுக்குத் திருப்தியை வழங்குகிறது.

திறனான சாலை உள்கட்டமைப்பு, ஒரு பகுதியின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

Verified RedEstate

கடந்த மூன்று ஆண்டுகளில், 11662 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 1451 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.19740 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 11499 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 1435 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.15794 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 2481 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 124 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.4720 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 1366 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 26 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.358 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த திட்டத்தின் விவரங்கள் பின்வருமாறு;

3.1.1.1 முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத்திட்டம் (CMRDP)

மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களால், 2021–22–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாவட்ட மற்றும் வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் முக்கிய மாநில நெடுஞ்சாலைகள், 2200 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழித்தடச் சாலைகளாகவும், இதர சாலைகள் 6700 கி.மீ. நீளத்திற்கு இருவழித்தடச் சாலைகளாகவும் அடுத்த 10 ஆண்டுகளில் அகலப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த முதன்மைத் திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், 577 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.4984 கோடி மதிப்பில் நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 1710 கி.மீ. நீளமுள்ள சாலைகள்

Verified PadEstate ™

ரூ.2464 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 489 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 1692 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இருவழித்தடச் சாலைகளாகவும் ரூ.6242 கோடி மதிப்பில் அகலப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 254 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1681 கோடி மதிப்பில் நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 328 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.452 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

Verified RealEstate

3.1.1.2 உயர்மட்டப் பாலங்கள் அமைத்தல்

❖ **முதலமைச்சரின் அனைத்துப் பருவ காலங்களிலும் தங்கு தடையற்ற சாலை இணைப்பு திட்டம்**

மழைக்காலங்களில், தரைப்பாலங்களின் மீது அதிக அளவில் மழைநீர் ஓடுவதால், கால்வாய்கள் மற்றும் ஆறுகளின் குறுக்கே போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது. இதனால், இதுபோன்ற நீர்நிலைகள் மற்றும் வாய்க்கால்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில், 2021–22–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் போது, "**முதலமைச்சரின் அனைத்துப் பருவ காலங்களிலும் தங்கு தடையற்ற சாலை இணைப்பு என்ற திட்டத்தின்" கீழ், 'தற்போதுள்ள தரைப்பாலங்களுக்குப் பதிலாக, உயர்மட்டப் பாலங்கள் 2026–ஆம் ஆண்டிற்குள் கட்டப்படும்'** என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1138 தரைப்பாலப் பணிகள்

Verified RedEstate ™

ரூ.2058.39 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 1063 தரைப்பாலங்கள் ரூ.1354.33 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 59 தரைப்பாலப் பணிகள் ரூ.196.26 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 3 தரைப்பாலங்கள் ரூ.8 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ இதர உயர்மட்டப் பாலங்கள் அமைத்தல்

நீர்நிலைகளின் குறுக்கே குறிப்பாக ஆறுகளின் குறுக்கே கட்டப்படும் பாலங்கள் தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதுடன் ஆற்றின் இரு கரைகளையும் இணைக்கின்றன.

மொத்தத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 277 உயர்மட்டப் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும், மாநில நிதியுதவியின் கீழ் 19 பணிகள் ரூ.596.14 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. நபார்டு கடனுதவியின் கீழ், 27 பாலப் பணிகள் ரூ.336.18 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 39 உயர்மட்டப் பாலப் பணிகள் ரூ.390.19 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மாநில நிதியுதவியின் கீழ் 6 உயர்மட்டப் பாலப்பணிகள் ரூ.131.70 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.1.3 உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களில் ஒன்றான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் பிரதிநிதிகளால் பரிந்துரைக்கப்பட்ட நிறைவேற்றப்படாத நீண்டகால மற்றும் முக்கிய கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ரூ.278.77 கோடி

மதிப்பில் 37 சாலைப் பணிகளும், ரூ.238.7 கோடி மதிப்பில் 2 புறவழிச் சாலை அமைக்கும் பணிகளும், ரூ.769.18 கோடி மதிப்பில் 6 புறவழிச்சாலை பணிகளுக்கான நில எடுப்புப் பணிகளும், ரூ.1.4 கோடி மதிப்பில் 6 புறவழிச் சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளும், ரூ.272.65 கோடி மதிப்பில் 26 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகளும், ரூ.44 கோடி மதிப்பில் 11 இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அவற்றில் ரூ.203 கோடி மதிப்பில் 16 சாலைப் பணிகள், 6 புறவழிச் சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள், 10 இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் 14 பாலங்கள்/ குறுபாலங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

Verified RedEstate™

3.1.1.4 உயர்மட்டச் சாலைகள்

பெரும் நகரங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும், தடையின்றி சீரான போக்குவரத்து செல்வதை உறுதி செய்வதற்கும் உயர்மட்டச் சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. துறையால் எடுத்துக் கொள்ளப்பட்ட சில உயர்மட்டச் சாலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன;

1. கோயம்புத்தூர் மாநகரில், அவினாசி சாலையில் கோல்ட்வின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 10.10 கி.மீ. நீளத்திற்கு ரூ.1791.23 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் உயர்மட்டச் சாலை: இப்பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது.

2. சென்னை மாநகரில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை: இப்பணி ரூ.621 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

Verified RealEstate

48 A





மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை இராஜீவ்காந்தி சாலையில் (O.M.R) டைடல் பூங்கா சந்திப்பில் "U" வடிவ மேம்பாலத்தை 25.02.2025 அன்று திறந்து வைத்தார்

Verified Real Estate ™



மாண்புமிகு அமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அவர்கள் சென்னை எல்லை சாலைப் பணிகளை 05.08.2024 அன்று ஆய்வு செய்தார் – திருவள்ளூர் மாவட்டம்

3.1.1.5 சாலை சந்திப்பு மேம்பாலங்கள்

போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் ஏற்படும் காலதாமதம் மற்றும் எரிபொருள் செலவினங்களை குறைக்கும் நோக்கில், நீண்ட கால நன்மை பயக்கும் திட்டமாக சாலை சந்திப்பு மேம்பாலங்கள் கட்டப்படுகின்றன.

இத்துறையால் எடுக்கப்பட்ட முக்கியச் சாலை மேம்பாலங்கள் பின்வருமாறு;

1. கோயம்புத்தூர் மாநகரில், உக்கடம் – ஆத்துப்பாலத்தில் ரூ.406 கோடி மதிப்பில் சாலை மேம்பாலப் பணி முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

2. மதுரை மாநகரம், கோரிப்பாளையம் சந்திப்பில் வாரணாசி – கன்னியாகுமரி சாலை (SHU 73) கி.மீ 440/100–441/0 வரை மற்றும் மதுரை – அழகர்கோவில் – மேலூர் சாலை (SH 72A) கி.மீ 0/0–0/6

வரை ரூ.190 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

3. மதுரை–தொண்டி சாலையில் (அப்போலோ மருத்துவமனை சந்திப்பு) கி.மீ.1/2–இல் சாலை மேம்பாலம் கட்டும் பணி ரூ.150 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

4. வண்டலூர்– வாலாஜாபாத் சாலையில் (படப்பை) கி.மீ.37/6–38/4–இல் ரூ.25.52 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் கட்டும் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது.

3.1.1.6 புறவழிச்சாலைகள் / இணைப்புச் சாலைகள் அமைத்தல்

❖ **புறவழிச்சாலைகள்**

நகரப்பகுதிகள் வழியாக செல்லும் போக்குவரத்தை மாற்றியமைப்பதிலும் மற்றும் முக்கிய நகரங்களில்

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதிலும் புறவழிச்சாலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. புறவழிச்சாலைகள் அமைக்கப்படுவதால் பயண நேரம், காற்று மாசுபடுதல் மற்றும் வாகன இயக்கச் செலவு குறைகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், 18 புறவழிச்சாலைப் பணிகள் ரூ.1362.92 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.221.81 கோடி மதிப்பில் திருத்துறைப்பூண்டி கட்டம்–I, பார்த்திபனூர், குன்னூர், பவானி கட்டம்–II, நாமக்கல் கட்டம்–I மற்றும் கமுதி ஆகிய 6 புறவழிச்சலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள புறவழிச்சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், போடிநாயக்கனூர், திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை கட்டம்–I, தென்காசி கட்டம்–I , ஆற்காடு, மன்னார்குடி கட்டம்–I, திண்டுக்கல் கட்டம்–I மற்றும் சிவகாசி வெளிவட்டச் சாலை கட்டம்–I ஆகிய 7 இடங்களில் ரூ.663 கோடி

மதிப்பில் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 57 புறவழிச்சாலைகளுக்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமானம் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ **இணைப்புச் சாலைகள்**

2024–25–ஆம் ஆண்டில் இராஜபாளையம் இணைப்புச் சாலை அமைக்கும் பணி ரூ.30 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

3.1.1.7 நகர்ப்புறப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துதல்

வணிகச் செயல்பாடுகள், அதிக பயணிகள் போக்குவரத்து, அதிகரிக்கும் உள்ளூர்ப் போக்குவரத்து மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களுக்கான அதிக தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புறங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. மாநில நெடுஞ்சாலைகளில்

Verified © RealEstate

நீண்டகால தீர்வு மற்றும் சீரான போக்குவரத்தினை ஏற்படுத்துவதற்காக, நகர்ப்புற எல்லைக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்த இத்துறை உறுதி கொண்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களால், 2021–22–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் போதிய இடம் இருப்பின், கடின புருவத்துடன் கூடிய நான்கு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தப்படும் எனவும் அவ்வாறு போதிய இடம் இல்லாத நிலையில், அதிகரித்து வரும் போக்குவரத்து செறிவை கருத்தில் கொண்டு, சாலையின் எல்லை வரையும் (ROW) அகலப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. மழைநீர் தேங்காமல் இருக்க நடைபாதையுடன் கூடிய வடிகால்கள் அமைக்கப்படுகிறது.

Verified RealEstate

கடந்த மூன்று ஆண்டுகளில், 172 கி.மீ. நீளத்திற்கு நகர்ப்புற மேம்பாட்டுப் பணிகள் ரூ.816 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 166 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் ரூ.731 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 39 கி.மீ. நீளத்திற்கு நகர்ப்புற மேம்பாட்டுப் பணிகள் ரூ.150 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 13 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் ரூ.10 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.1.8 பேரிடர் மேலாண்மை செயல்பாடுகள்

தமிழ்நாடு, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை மூலம் அதிக மழையைப் பெறுகிறது. நெடுஞ்சாலைத் துறை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்

Verified RealEstate™

மாதத்தில் புதர்கள், கொடிகள், தாவரங்கள், செடிகள் போன்றவற்றை அகற்றுதல், தங்கு தடையின்றி நீர் செல்வதற்கு ஏதுவாக சிறுபாலங்கள் / பாலப்பகுதிகளில் காணப்படும் தடைகள் மற்றும் அடைப்புகளை நீக்குதல் போன்ற மழைக்கால முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2023–24–ஆம் ஆண்டில், ரூ.250 கோடி மதிப்பில் 404 தற்காலிக வெள்ளச் சீரமைப்புப் பணிகளும், ரூ.475 கோடி மதிப்பில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள் குறுபாலங்கள்/தரைப்பாலங்கள், வடிகால் உள்ளிட்ட 370 நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் ரூ.228 கோடி மதிப்பிலான 402 தற்காலிக வெள்ளச் சீரமைப்புப் பணிகளும் ரூ.351 கோடி மதிப்பிலான 343 நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்

முனைவர் வி.திருப்புகழ் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சென்னை பெருநகரப் பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை தடுக்கும் வகையில் 2023–24–ஆம் ஆண்டில் ரூ.91.73 கோடி மதிப்பீட்டில் 13 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன. 2023–24–ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.105.68 கோடி மதிப்பில் 14744 மீ நீளமுள்ள வடிகால் பணிகள், 9 குறுபாலங்கள் மற்றும் 128 கி.மீ நீளமுள்ள சாலைகளில் வடிகாலை அடைக்கும் மண் துகள்களை சேகரிக்கும் தொட்டிகள் உள்பட 46 நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன.

❖ ஃபெங்கல் புயல்

2024 டிசம்பர் மாதத்தில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர்,

திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்தது. பெய்த மழையின் காரணமாக நீர்ப்பிடிப்புப் பகுதி முழுவதும் தேங்கிய வெள்ள நீர், சாலைகளின் பல்வேறு குறுக்கு வடிகால்களின் வழியே சென்று பாலங்கள் மற்றும் சிறு பாலங்களின் கட்டமைப்புகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. இம்மாவட்டங்களில் பெரும்பாலான சாலைகள் வெள்ளத்தால் மூழ்கிய காரணத்தால், சாலைகள் சேதமடைந்து, அதிக போக்குவரத்து தடைகள் ஏற்பட்டது.

வெள்ளப் பெருக்கு ஏற்படும் பட்சத்தில் போக்குவரத்து அமைப்பை உடனடியாக சீரமைப்பதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, பருவமழைக்கு முந்தைய ஆயத்தப் பணிகளின் போது தயாரிக்கப்பட்ட குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் பல்வேறு சாலைகளில் செயல்படுத்தப்பட்டது. ரூ.15 கோடி செலவில் குறுகிய காலத் திட்டம்

செயலாக்கப்பட்டு, சாலைகள் சரி செய்யப்பட்டு போக்குவரத்து சீரானது.

3.1.1.9 சாலை வகைப்பாடுகள் வாரியாக ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் விவரம்

❖ **மாநில நெடுஞ்சாலைகள்**

கடந்த மூன்று ஆண்டுகளில், மொத்தமாக 1673 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 137 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.9316 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 1559 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 132 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.6764 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், மொத்தமாக 468.45 கி.மீ. நீளமுள்ள சாலைகளை

அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் மற்றும் 26 பாலங்கள்/ குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.2657 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 86 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 4 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.66 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ மாவட்ட முக்கிய சாலைகள்

கடந்த மூன்று ஆண்டுகளில், மொத்தமாக 1908 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் மற்றும் 230 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.3385 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 1878 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 226 பாலங்கள்/ சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.2827 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

Verified RedEstate

2024–25–ஆம் நிதியாண்டில், மொத்தமாக 326.21 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும்/ மேம்படுத்தும் பணிகள் மற்றும் 23 பாலங்கள்/ குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.651 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 118 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 8 பாலங்கள்/ சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.67 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ **மாவட்ட இதர சாலைகள்**

கடந்த மூன்று ஆண்டுகளில், மொத்தமாக 2987 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 1074 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.4821 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 2968 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 1067 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.3985 கோடி மதிப்பில்

Verified RealEstate

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், மொத்தமாக 476.37 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 75 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.836 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 149 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 14 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் ரூ.79 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.1.10 மாவட்ட இதர சாலைகள் – சிறப்புக் கூறு திட்டம்

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டத்தின் கீழ், 40 சதவிகிதத்திற்கு மேல் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் குடியிருப்புகளை

இணைக்கும் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், 500 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் மற்றும் 10 பாலங்கள்/குறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.607 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2024–25–ஆம் நிதியாண்டில், 133.14 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும்/ மேம்படுத்தும் பணிகள் ரூ.155 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 64 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.13 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

Verified RealEstate

3.1.1.11 சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம்

பொதுவாக சாலைகளின் மேற்பரப்பானது, 5 ஆண்டுகள் சேவை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. மேலும், சாலைகளின் சேவைத்திறனை தக்க வைத்தல், வாகன இயக்கச் செலவுகளைக் குறைத்தல் (VOC), வாகன தேய்மானத்தைக் குறைத்தல், காற்று மாசுபாட்டை குறைத்தல் மற்றும் சாலை விபத்துகளை குறைத்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சாலைகளின் ஓடுதளப்பாதை தேவைக்கேற்ப மேம்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், 4594 கி.மீ. நீளத்திற்கு சாலை ஓடுதளப் பாதை மேம்பாட்டுப் பணிகள் ரூ.1611 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

Verified RealEstate™

2024–25–ஆம் நிதியாண்டில், 1077 கி.மீ. நீளத்திற்கு சாலை ஓடுதளப் பாதை மேம்பாட்டுப் பணிகள் ரூ.421 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 948 கி.மீ. நீளமுள்ள மேம்பாட்டு பணிகள் ரூ.133 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMDP – Chennai Metropolitan Development Plan) கீழ், சென்னை பெருநகர பகுதியில் (CMA), வாகனம் மற்றும் பாதசாரிகளின் தடையற்ற போக்குவரத்திற்காக நெடுஞ்சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில குறிப்பிடத்தக்கப் பணிகள் பின்வருமாறு;

Verified RedEstate

1. பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.19.48 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் 11.02.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

2. மத்திய கைலாஷ் பகுதியில் சர்தார் பட்டேல் சாலை மற்றும் இராஜீவ் காந்தி சாலை சந்திப்பில் ரூ.60.69 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலை மேம்பாலப்பணி நடைபெற்று வருகிறது.

3. கிழக்கு கடற்கரை சாலையை ஆறுவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிபடுத்தும் பணியில், கொட்டிவாக்கம் பகுதியில் 0.935 கி.மீ. நீளத்திற்கு ரூ.21.95 கோடி மதிப்பிலும், பாலவாக்கம் பகுதியில் 1.15 கி.மீ.

Verified RealEstate™

நீளத்திற்கு ரூ.21.18 கோடி மதிப்பிலும் மற்றும் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் 6.6 கி.மீ. நீளத்திற்கு ரூ.134.58 கோடி மதிப்பிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

4. இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் புதிய இணைப்புச் சாலைப் பணியில், இராஜீவ் காந்தி சாலை முதல் பக்கிங்காம் கால்வாய் வரை உள்ள சாலைப் பணி ரூ.18.25 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. பக்கிங்காம் கால்வாய் முதல் கிழக்கு கடற்கரை சாலை வரை உள்ள இணைப்பிற்கு நில எடுப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. கட்டுமான பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

Verified RedEstate

5. நொளம்பூரில், கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிக்கு ரூ.92.91 கோடி மதிப்பில் நெடுஞ்சாலைத் துறையால் நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

6. 2024–25–ஆம் ஆண்டில், தமிழ்நாடு இசைக் கல்லூரி அருகில், பசுமைவழிச் சாலையை (டிஜிஎஸ் தினகரன் சாலை) துர்காபாய் தேஷ்முக் சாலையுடன் இணைக்கும் புதிய சாலைப்பணி ரூ.37.86 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

7. 2024–25–ஆம் ஆண்டில், பாடிக்குப்பத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணி ரூ.29.70 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

Verified RedEstate™

8. பெரிய மேற்கத்திய சாலையில் (GWT) நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் உள்வட்டச் சாலையில் (IRR) செந்தில் நகர் சந்திப்பு ஆகிய 2 இடங்களில் ரூ.30.67 கோடி மதிப்பில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. 2024–25–ஆம் ஆண்டில், நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய 2 நடை மேம்பாலங்கள் i) மறைமலை அடிகள் பாலம் – இரும்புலியூர் சாலையில் வேளச்சேரியில், ரூ.16.14 கோடி மதிப்பிலும் ii) உள்வட்டச் சாலையில் கோயம்பேட்டில் ரூ.19.64 கோடி மதிப்பிலும் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

Verified RealEstate™

3.2 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்

2021–22–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் போது, "10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய/ ஊராட்சி சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக (ODR) பல்வேறு கட்டங்களில் தரம் உயர்த்தப்படும்" என மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஊரகச் சாலைகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பட வழிவகுக்கும் என்பதால் அரசு இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், 2786.58 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.3056.01 கோடி மதிப்பில் தரம் உயர்த்த எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில், 2668.82 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.2922.17 கோடி

மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 1187.08 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.1448.21 கோடி மதிப்பில் தரம் உயர்த்த எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.3 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள்/ வரைறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் அமைத்தல்

❖ இரயில்வே திட்ட பணிகள் (RWP)

இருப்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் இரயில்வே துறையுடன் 50:50 பணப் பகிர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரயில் இயக்கங்கள் அதிகரிப்பால் இருப்புப் பாதைக் கடவுகள் மூடப்படுவதால் சாலை வாகனங்கள் செல்ல தடை ஏற்படுகிறது. இரயில்வே கடவுகளில் கணக்கீட்டின்படி,

Verified RealEstate

ஒரு நாளின் இரயில் வாகன அலகு (TVU) ஒரு இலட்சத்திற்கு அதிகமாகும்போது, தற்போதுள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ.833.17 கோடி மதிப்பில் 22 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. 49 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலப் பணிகள் ரூ.2232.75 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

மேலும் 2024–25–ஆம் நிதியாண்டில், ரூ.199.72 கோடி மதிப்பில் 5 இரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மற்றும் சிவாடி மற்றும் தர்மபுரி இரயில் நிலையங்களுக்கு இடையில் கடவு எண் 41–க்கு பதிலாக இரயில்வே

மேம்பாலம் கட்டும் பணி ரூ.37.84 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கப்பட உள்ளது.

❖ மாநில நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் பணி

திருப்பூர் சாலை உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சாலைகள் திட்டத்தின் கீழ் சிக்கன்னா கல்லூரி அருகே இரயில்வே கி.மீ. 445/19–21–இல் உள்ள இரயில்வே வளைவு பாலம் எண். 29–க்கு மாற்றாக மாநில நிதியிலிருந்து ரூ.42.76 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலத்தின் அமைவிடத்தில் இரயில்வே கடவு இல்லாததால் இந்த மேம்பாலப் பணி மாநில நிதியுதவியின்கீழ், வைப்பு நிதி பணியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Verified RealEstate ™

❖ **மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி (CRIF)– சேது பந்தன்**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் கடவு எண்.20 மற்றும் கடவு எண்.1–க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி பல ஆண்டுகளாக தடைப்பட்டு இருந்தது. துறையின் தொடர் நடவடிக்கையின் காரணமாக தற்பொழுது ரூ.170 கோடி மதிப்பில் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

3.4 பராமரிப்புப் பணிகள்

தொடர்ச்சியான பராமரிப்பு நடவடிக்கைகள் மூலம், சாலைகளின் ஆயுட்காலம் அதிகரிப்பதுடன், பழுதுபார்த்தல்/ திரும்பக் கட்டுதல் ஆகியவற்றுக்கான செலவு குறைகிறது.

பராமரிப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு;

- சாலைகள்/ பாலங்களைப் புதுப்பித்தல்/ சிறப்புப் பழுதுபார்த்தல்.

Verified RealEstate™

- சாலையில் ஏற்படும் பள்ளங்களை சரி செய்தல்.
- வரையறுக்கப்பட்ட அளவுகளின் படி புருவங்கள் அமைத்தல்.
- சிறுபாலங்கள் மற்றும் கால்வாய்களில் உள்ள செடிகொடிகளை அகற்றிச் சுத்தம் செய்தல் மற்றும் வடிகால்களைத் தூர்வாருதல்.
- சாலையோரத் தடுப்பான், மையத் தடுப்பான் மற்றும் விபத்து தடுப்புச் சுவர்கள் பராமரித்தல்.
- ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல் மற்றும் அகற்றுதல்.

கடந்த மூன்று ஆண்டுகளில், 9305 கி.மீ நீளமுள்ள சாலைகளில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் ரூ.1777 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2024–25–ஆம் நிதியாண்டில், 3290 கி.மீ நீளமுள்ள சாலைகளில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் ரூ.500 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

Verified RedEstate ™

3.5 ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

3.5.1 ஆண்டுத் திட்டம் (தேசிய நெடுஞ்சாலை)

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் ஆண்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் நிதியின் மூலம் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 651.57 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 15 பாலப் பணிகள் ரூ.3722.76 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 469.45 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 7 பாலப் பணிகள் ரூ.1431.48 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 210.30 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.563.25 கோடி

Verified RealEstate™

மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 55.10 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

3.5.2 சேது பாரதம் திட்டம்

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் சேது பாரதம் என்ற திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

திட்டத்தின் கீழ் ரூ.412.11 கோடி மதிப்பில் 6 இரயில்வே மேம்பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.5.3 செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC)

2023-24-ஆம் நிதியாண்டில், ரூ.53.77 கோடி மதிப்பிலான 31.80 கி.மீ நீளமுள்ள சாலைப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2024–25–ஆம் ஆண்டில், ரூ.60.74 கோடி மதிப்பிலான 42.10 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

3.5.4 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள் (Centrally Sponsored Schemes)

❖ **மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி திட்டம் (CRIF) (மாநில சாலைகளுக்காக)**

மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதியின் கீழ் மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், பாலங்களை கட்டுதல்/ திரும்ப கட்டுதல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்படும் நிதியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் 25.41 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.131.58 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 17.80 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.75.05 கோடி மதிப்பில்

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 66.06 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.182.11 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

3.6 வைப்பு நிதி பணிகள்

கட்டுமானம் (ம) பராமரிப்பு மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆகிய அலகுகளின் மூலம் சில பணிகள் வைப்பு நிதிப் பணிகளாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. இப்பணிகளுக்கு பிற துறை/ நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 134.20 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 2 பாலப் பணிகள் ரூ.841.45 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 95 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 2 பாலப் பணிகள் ரூ.706.01 கோடி மதிப்பில்

Verified RealEstate

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 0.6 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணி ரூ.1.32 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.7 பாலங்களின் கட்டமைப்புக்கான வடிவமைப்பு

நெடுஞ்சாலைத் துறையில் பாலங்களின் ஆய்வு மற்றும் வடிவமைப்பிற்காக ஒரு சிறப்பு அலகு செயல்பட்டு வருகிறது. இந்த அலகில் ரூ.2 கோடிக்கு மேலான அனைத்து பாலங்களும் வடிவமைத்து அங்கீகரிக்கப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 300 பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகள் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2024–2025–ஆம் நிதியாண்டில் 46 பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகள் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

Verified RedEstate

பொதுவாக ஒவ்வொரு பாலத்திற்கும் புதிதாக வடிவமைத்து வரைபடம் தயாரிக்கப்படுவதால் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இதை தவிர்க்கும் பொருட்டு பல்வேறு வகை பாலங்களின் வரைபடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பாலத்தின் 16 வகை மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் புத்தக வடிவில் தயாரித்து, எளிதான பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.07.2024 அன்று வெளியிடப்பட்டது.

இந்த வரைபட புத்தகம் அனைத்து செயலாக்க கண்காணிப்பு பொறியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் துறையின் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

Verified RedEstate

80 A



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.08.2024 அன்று திறந்து வைக்கப்பட்ட உக்கடம் – ஆத்துப்பாலம் சந்திப்பு மேம்பாலத்தின் தோற்றம்–கோயம்புத்தூர் மாவட்டம்

3.8 தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள்

❖ திட்டக் கண்காணிப்பு மற்றும் தகவல் அமைப்பு (PMIS)

நெடுஞ்சாலைத்துறை, ஆண்டுதோறும் அதிக மூலதன செலவுள்ள சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. பணிகளை செயலாக்கும் அலகுகள், கட்டுமானத்திற்கு முந்தைய நடவடிக்கைகள், கொள்முதல் மற்றும் கட்டுமான பணிகளை செயல்படுத்துகின்றன.

திட்டப்பணிகளை சரியான நேரத்தில் பயன்பாட்டிற்கு வழங்கவும், பணிகளின் வெவ்வேறு நிலைகளை கண்காணிக்கவும், திட்டங்களை திறம்பட நிர்வகிக்கவும், நெடுஞ்சாலைத் துறையானது இணையதளம் மற்றும் கைபேசி இணக்கமான "திட்டக் கண்காணிப்பு மற்றும் தகவல் அமைப்பை" (PMIS) நிறுவியுள்ளது. இந்த தகவல் அமைப்பின் மூலமாக, பணிகளின் முன்னேற்றத்தை வெவ்வேறு நிலைகளில் கண்காணித்து பணிகளை விரைவாக செயல்படுத்தி,

Verified RealEstate™

உரிய நேரத்தில் முடிப்பதன் மூலம் திட்டங்களின் சமூக–பொருளாதார நன்மைகள் உறுதியாகிறது.

இந்த இணையதள அமைப்பின் மூலம் கோட்டம், உட்கோட்டம் மற்றும் பிரிவு நிலையிலுள்ள திட்டங்களை செயல்படுத்தும் அலுவலர்களால் பணிகளின் விவரங்கள் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டு, அவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

❖ நம்ம சாலை செயலி

"விபத்தில்லா மாநிலம்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தினை செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை பொதுமக்களின் பங்களிப்போடு அடைவதற்கு ஏதுவாக "நம்ம சாலை" என்னும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை, சாலை பயனாளர்களின் சிரமங்களைக் குறைக்கும் வகையில், மக்களின்

Verified RealEstate

பங்களிப்போடு புகார்களை தெரிவிக்கும் முறையை நிறுவி, பள்ளங்களற்ற சாலைகளை பராமரிப்பதை உறுதி செய்துள்ளது. அனைத்து மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் உள்ள பள்ளங்கள் மற்றும் இதர சாலை தொடர்பான புகார்களை பொதுமக்கள் அளிக்கும் வகையில் இணையதள அடிப்படையிலான இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது. நம்ம சாலை செயலி மூலம் பெறப்படும் பள்ளங்கள் மற்றும் சாலை தொடர்பான புகார்கள், மாநில நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரத்திற்குள்ளும் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 72 மணி நேரத்திற்குள்ளும் சரி செய்யப்படுகிறது.

பொது மக்கள், "நம்ம சாலை" கைபேசி செயலியைப் பயன்படுத்தி, சாலைகளில் உள்ள பள்ளங்கள் தொடர்பான பிரச்சனைகளைப் புகாரளிக்கின்றனர், நெடுஞ்சாலைத்துறை புகாரின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்த பின்பு, புகாரளித்த

Verified RealEstate™

பயனருடைய கருத்துக்களை பெறுகின்றது. இது வரை 4390 புகார்கள் பொதுமக்கள் திருப்தியடையும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளன. தற்பொழுது இந்த செயலியை ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மற்றும் வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள சாலைகளுக்கும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ மின்னணு–ஒப்பந்ததாரர் பதிவு

ஒப்பந்ததாரர்கள் நேரடியாக பதிவு செய்யும் முறைக்கு மாற்றாக, இணையதளம் மூலம் பதிவுசெய்ய ஏதுவாக "மின்னணு –ஒப்பந்ததாரர் பதிவு" எனும் இணையதளமானது, தமிழ்நாடு அரசின் நிதித் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (TNeGA) வழங்கப்படும் இ–சேவைகளில் இந்த வசதி உள்ளது.

Verified RealEstate™

நெடுஞ்சாலைத் துறையில் அனைத்து ஒப்பந்ததாரர் பதிவு/புதுப்பித்தல்/தரம் உயர்த்துதல் ஆகிய பணிகள் 01.07.2024 முதல் இந்த இணையதளத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ இணைய வழி கொள்முதல்

இத்துறையினால் கோரப்படும் அனைத்து ஒப்பந்த புள்ளிகளும் நிதித் துறையின் www.tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலம் மின்னணு முறையில் (இ–டெண்டர்கள்) மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பினை திறம்பட நிர்வகிக்க நெடுஞ்சாலைத்துறையானது சாலைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (RMMS) என்கிற வலை தள அமைப்பினை பயன்படுத்தி வருகிறது.

Verified PeelEstate

நெடுஞ்சாலைத் துறையில் கீழ்க்கண்ட இணையதளங்கள் பராமரிக்கப்படுகின்றன.

- https://www.tnhighways.tn.gov.in
- https://www.tnrsp.tn.gov.in
- https://www.ckicp.tn.gov.in

Verified RealEstate™

4. பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள்

4.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II–இல், ரூ.6567.28 கோடி திட்ட மதிப்பீட்டில் முக்கிய சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகள் உலக வங்கியின் கடனுதவியுடன் (ரூ.2123 கோடி – 300 மில்லியன் அமெரிக்க டாலர்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 535.346 கி.மீ நீளமுள்ள சாலைகள், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் (EPC mode of Contract) மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 436.981 கி.மீ நீளமுள்ள சாலைகள் கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடச் சாலையாகவும் மற்றும் 96.545 கி.மீ நீளமுள்ள சாலைகள் நான்கு வழித் தடச் சாலையாகவும் அகலப்படுத்தப்பட்டுள்ளன.

Verified RealEstate

மீதமுள்ள 1.82 கி.மீ –இல், 2 இரயில்வே மேம்பாலப் பணிகள் இரு சாலைகளில் நடைபெற்று வருகிறது.

4.1.1 விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 3319 கி.மீ நீளமுள்ள சாலைகளுக்கு, 'தயார் நிலை திட்ட தொகுப்பிற்காக' விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.132.76 கோடி ஒதுக்கப்பட்டது. அதன் மூலம், 719 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.2 சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டம்

இத்திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (484 மில்லியன் அமெரிக்க டாலர் (USD)), தமிழ்நாடு தொழில்துறை இணைப்பு திட்டத்தின் கீழ், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் ஒப்பந்தம் (Engineering,

Verified RealEstate ™

Procurement & Construction (EPC)) அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. மொத்த கட்டுமான செலவில், 80 சதவிகிதம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியும், மீதமுள்ள 20 சதவிகித கட்டுமான செலவு மற்றும் நில எடுப்பு & மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு பணிகள் மாநில அரசின் நிதியும் ஆகும்.

4.2.1 திட்ட அம்சங்கள்

இத்திட்டத்தின் கீழ், 589 கி.மீ. சாலைகளில், 72.43 கி.மீ சாலைகள் இருவழித் தடச் சாலையிலிருந்து கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடச் சாலையாகவும், மீதமுள்ள 516.57 கி.மீ. சாலைகள் இருவழித் தடச் சாலையிலிருந்து கடின புருவத்துடன் கூடிய இருவழித் தடச் சாலையாகவும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. நில எடுப்பு தொகை உட்பட, இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.7847.49 கோடி ஆகும்.

Verified RedEstate™

இத்திட்டத்தில் 22 புறவழிச்சாலைகள், 16 உயர்மட்ட பாலங்கள், 9 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்ப்பாலம், 2 சாலை சந்திப்பு மேம்பாலங்கள், ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை, ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை, 2 வாகன சுரங்கப் பாதைகள், 122 சிறு பாலங்கள், 1367 குறு பாலங்கள் ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு போதிய முன்னெச்சரிக்கை பலகைகள், வழிகாட்டிப் பலகைகள், தெருவிளக்குகள் மற்றும் இதர சாலை உபகரணங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கண்காணிப்பு அமைப்பின் ஒரு பகுதியாக, விபத்து பகுதிகள், முக்கிய சந்திப்புகளில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பயணிகள் வசதிக்காக கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

Verified RealEstate™

4.2.2 கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம்

மொத்தம் எடுத்துக் கொள்ளப்பட்ட 589 கி.மீ நீளமுள்ள 16 மாநில நெடுஞ்சாலைப் பணிகளில் 556 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 16 மாநில நெடுஞ்சாலைப் பணிகளில், 6 மாநில நெடுஞ்சாலைப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

இதில், தரம் உயர்த்தப்பட்ட செய்யூர்–பனையூர் இணைப்புச் சாலை உள்ளிட்ட 109 கி.மீ. நீளமுள்ள செய்யூர்–வந்தவாசி–போளூர் சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.02.2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

4.3 சென்னை எல்லை சாலைத் திட்டம்

சென்னையில் வேகமாக அதிகரித்து வரும் போக்குவரத்து தேவையை நிவர்த்தி செய்யவும், தமிழ்

நாட்டின் தென்பகுதிகளில் இருந்து எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்கள் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு வாகனங்களின் இணைப்பை மேம்படுத்துவதன் மூலம் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள தொழில் மற்றும் வணிக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், சென்னை எல்லை சாலைத் (CPRR) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 133.64 கி.மீ நீளமுள்ள, சென்னை எல்லை சாலைத் திட்டமானது, நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புடன் (ITS) ஒருங்கிணைக்கப்பட்ட, இருபுறமும் இருவழிச் சேவைச் சாலைகளைக் கொண்ட, அணுகல்–கட்டுப்படுத்தப்பட்ட ஆறுவழிப் பாதையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.16501.96 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படுகிறது. சென்னை எல்லை சாலைத் திட்டமானது ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

Verified RealEstate™

4.3.1 சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு I

சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு I, எண்ணூர் துறைமுகத்திலிருந்து தச்சூர் வரை, சென்னை வெளிவட்ட சாலைக்கான இணைப்பு சாலையுடன், 25.4 கி.மீ நீளத்திற்கு, ரூ.3339 கோடி மதிப்பில், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனம் (JICA) மூலம் 40074 மில்லியன், ஜப்பானிய யென் (ரூ.2473.70 கோடி) வெளிநிதியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

4.3.2 சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு II & III

பிரிவு II, தச்சூரிலிருந்து திருவள்ளூர் புறவழிச்சாலை தொடங்கும் இடம் வரை 26.10 கி.மீ. நீளமும், பிரிவு III திருவள்ளூர் புறவழிச் சாலையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை 30.10 கி.மீ. நீளமுமாக மொத்தம் 56.20 கி.மீ. நீளம் கொண்டுள்ளது.

Verified RealEstate™

இப்பிரிவுகள், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.4899 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டு நிதி உதவியில், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) மூலம் 378 மில்லியன் அமெரிக்க டாலரும் (ரூ.3014.92 கோடி) மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி அமைப்பின் (OPEC) மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலரும் (ரூ.797.6 கோடி) பெறப்படுகிறது.

4.3.3 சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு IV

திருபெரும்புதூரில் தொடங்கி சிங்கப்பெருமாள் கோயிலில் முடிவடையும் இப்பிரிவின் மொத்த நீளம் 23.80 கி.மீ. ஆகும். மாநில நிதியுதவியுடன் இப்பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. இச்சாலையை சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் தரத்திற்கு மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை

தயாரிக்கும் பணி தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

4.3.4 சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு V

பிரிவு V, சிங்கப்பெருமாள் கோயிலில் தொடங்கி மாமல்லபுரம் அருகில் பூஞ்சேரி சந்திப்பு (NH 332A) வரை 28.24 கி.மீ. நீளம் கொண்டதாகும். நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 49847 மில்லியன் ஜப்பான் யென் (ரூ.2784 கோடி) நிதியுதவி பெற ஏதுவாக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தினுடன் (JICA) ஒப்பந்தமிடப்பட்டுள்ளது. கட்டுமான பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

Verified RealEstate

5. சாலைப் பாதுகாப்பு

சாலை பாதுகாப்பு என்பது பயனாளர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதாகும். சாலை விபத்துகளால் பெருமளவில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படுகிறது. மேலும் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவதால் அரசுக்கு கூடுதல் நிதி சுமையும் உண்டாகிறது. மேலும் விபத்தினால் ஏற்படும் பல்வேறு வகையான சேதங்களால் மாநிலத்தின் உற்பத்தித் திறன் பாதிப்படைகிறது.

சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு;

- அதிவேகம்
- போக்குவரத்து விதிகளை மீறுதல்
- நீண்ட தூர பயணத்தின் போது வாகனம் ஓட்டுவதில் ஏற்படும் சோர்வு
- வாகனம் ஓட்டும்போது கைப்பேசி பயன்படுத்துதல்
- சாலை சுற்றுச்சூழல் காரணிகள்

Verified RealEstate

96 A



மாண்புமிகு அமைச்சர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்கள் அக்கரைப்பேட்டை இரயில்வே மேம்பாலப் பணிகளை 02.03.2025 அன்று ஆய்வு செய்தார்கள்–நாகப்பட்டினம் மாவட்டம்

Verified Red Note ™

5.1 அரசால் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள்

5.1.1 மாநில சாலைப் பாதுகாப்பு குழு (SRSC)

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் தலைமையின் கீழ், மாநில சாலைப் பாதுகாப்பு குழு (SRSC) 04–07–2007 அன்று உருவாக்கப்பட்டது. மாநிலத்தில் சாலை போக்குவரத்துப் பாதுகாப்பு குறித்த அம்சங்களை மேம்படுத்துவதே இக்குழுவின் நோக்கமாகும்.

சாலைப் பாதுகாப்பு தொடர்பான அனைத்து கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் உயர் மட்ட அமைப்பாக இக்குழு உள்ளது.

5.1.2 இன்னுயிர் காப்போம் திட்டம்

சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்

Verified RealEstate™

18.11.2021 அன்று நடைபெற்ற சாலைப் பாதுகாப்புக் கூட்டத்தில், "இன்னுயிர் காப்போம் திட்டத்தின்" கீழ் உயிர் இழப்பு விபத்து நிகழ்வு குறைப்பு (FAIR – சீரான சாலைகள்) திட்டம் அறிவிக்கப்பட்டது.

5.1.3 சிறப்புப் பணிக்குழு – சாலைப் பாதுகாப்பு

உயிர் இழப்பு விபத்து நிகழ்வு குறைப்பு (FAIR) திட்டத்தை செயல்படுத்த சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக்குழு 15.3.2022 அன்று மாநில குற்றப் பதிவுப் பணியகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இக்குழுவில், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்களும் ஒரு உறுப்பினராவார். இக்குழு சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறிந்து பரிந்துரைகளை அளித்தும், செயல்படுத்தப்படுவதை கண்காணித்தும் வருகிறது.

Verified RealEstate

5.1.4 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு

சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதின் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.8.2022 அன்று 'சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு' வெளியிடப்பட்டது.

5.1.5 மாவட்ட அளவிலான சாலைப் பாதுகாப்பு ஆய்வுக் கூட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சாலைப் பாதுகாப்பை வலியுறுத்தவும், சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாவட்ட வாரியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்த அறிவுறுத்தியுள்ளார். மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களால் சாலைப் பாதுகாப்பு தொடர்புடைய அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட வாரியான சாலைப் பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை நாமக்கல், செங்கல்பட்டு,

Verified RealEstate

நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர், விருதுநகர், கரூர், திருப்பூர், திருவாரூர், நாகப்பட்டினம், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், திண்டுக்கல், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 22 மாவட்டங்களில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டங்களில், வாகன உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கல்வி நிறுவனங்களின் தாளாளர்கள், கல்லூரி முதல்வர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் பயிற்றுநர்கள், சிற்றுந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

5.2 சாலைப் பாதுகாப்பில் நெடுஞ்சாலைத் துறையின் பங்கு

விபத்துகளைக் குறைக்கவும், பாதுகாப்பான சாலை பயணத்தை ஊக்குவிக்கவும், நன்கு வடிவமைக்கப்பட்ட, முறையாகப் பராமரிக்கப்படும்

சாலைகளை உறுதி செய்வதன் மூலம் சாலை விபத்துகளைத் தடுப்பதில் நெடுஞ்சாலைத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

சாலைப் பாதுகாப்பு தணிக்கை

அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும், சாலை விபத்து நிகழும் இடங்கள் மற்றும் விபத்துக்கான காரணங்களைக் கண்டறிய சாலைப் பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த தணிக்கையின் அடிப்படையில், சாலை விபத்துகள் மேலும் நிகழாமல் தடுக்க தகுந்த சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

சாலைப் பாதுகாப்பு உபகரணங்கள்

விபத்து நடக்க சாத்திய கூறுகள் உள்ள சாலைப் பகுதிகள் மற்றும் சாலை சந்திப்புகளில் முன்னெச்சரிக்கை குறியீடுகள், அறிவிப்பு பலகைகள் மூலம் விபத்துகள் நிகழா வண்ணம் நடவடிக்கை

Verified RealEstate ™

மேற்கொள்ளப்படுகிறது. உயரமான சாலைகளின் ஓரங்களில் சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பிற்காக மோதல் தடுப்பான்கள் நிறுவப்படுகிறது. மலைப்பாதைகள் மற்றும் கூரான வளைவுகளில் உருளை தடுப்பான்கள் நிறுவப்படுகிறது.

சாலைப் பாதுகாப்புப் பணிகள்

கடந்த மூன்று ஆண்டுகளில், 1652 சாலைப் பாதுகாப்புப் பணிகள் ரூ.674.68 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில், 1648 சாலைப் பாதுகாப்புப் பணிகள் ரூ.661.52 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2024–25–ஆம் நிதியாண்டில், 300 சாலைப் பாதுகாப்புப் பணிகள் ரூ.207.47 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

Verified RealEstate

சாலை சந்திப்பு மேம்பாடுகள்

சாலை சந்திப்புகள் அடிக்கடி விபத்துக்கள் நடக்கும் பகுதிகளாக இருப்பதால், இந்திய சாலை குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளின்படி (IRC) சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.210.26 கோடி மதிப்பிலான 171 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2024–25–ஆம் ஆண்டில், 137 சந்திப்புகளில் ரூ.162.12 கோடி மதிப்பில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சாலை விபத்து நடக்கும் கரும்புள்ளிகளைச் சரிசெய்தல்

அடிக்கடி விபத்துகள் நிகழும் இடங்கள் கண்டறியப்பட்டு, அதற்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால்

Verified RedEstate

(MoRTH) 2015–18–ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 1208 இடங்களில் விபத்துக் கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் 273 இடங்களில் விபத்துக் கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளது. அத்தகைய இடங்களில் வேகத் தடைகள் அமைத்தல், பாதசாரிகள் கடக்கும் இடங்கள் அமைத்தல், குறுக்குவெட்டுப் பட்டைகள் அமைத்தல் போன்ற குறுகிய கால சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை, 865 கரும்புள்ளிகளுக்கு நீண்டகால நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள விபத்து கரும்புள்ளிகளைச் சீரமைக்கும் நீண்டகாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விபத்துக் கரும்புள்ளிகளாக மாற வாய்ப்புள்ள பகுதிகளைச் சரிசெய்தல்

சாலைப் பாதுகாப்புக்கான சிறப்பு பணிக்குழு, கள ஆய்வு–1–இல் விபத்துக் கரும்புள்ளி பகுதிகளாக மாற

வாய்ப்புள்ளதாகக் கண்டறிந்த 3980 இடங்களில் குறுகிய கால மற்றும் நீண்ட கால சீரமைப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. கள ஆய்வு-2-இல் கண்டறியப்பட்ட 2185 இடங்களில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சாலைப் பாதுகாப்புப் பயிற்சி

சாலைப் பாதுகாப்புப் பயிற்சி முக்கியமானதாகும். பொறியாளர்கள் பாதுகாப்பான சாலைகளை வடிவமைக்கவும் மற்றும் விபத்துகள் நேரிடுவதைக் குறைத்திடவும் இப்பயிற்சி உதவுகிறது. இதுவரை, 16 குழுமமாக 590 பொறியாளர்கள் சாலைப் பாதுகாப்பு நெறிமுறை குறித்த பயிற்சி பெற்றுள்ளனர். சாலைப் பாதுகாப்புப் பொறியியலின் முக்கியக் கூறுகள் மற்றும் களத்தில் செய்முறை குறித்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளது.

சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

சாலைப் பாதுகாப்பு அலகைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின்

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் பொறியாளர்கள், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் துறையினர், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர். 2024–25–ஆம் ஆண்டில், 259 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சிகளால், விபத்துகளின் உயர்வு விகிதம் கணிசமாகக் குறைந்து வருகிறது. 2023–ஆம் ஆண்டை விட 2024–ஆம் ஆண்டில் இறப்புகளின் எண்ணிக்கை 1.48 விழுக்காடு குறைந்துள்ளது.

Verified RealEstate™

6. ஆராய்ச்சி, பரிசோதனை, தரக்கட்டுப்பாடு மற்றும் பயிற்சி

6.1 ஆராய்ச்சி

1957–இல் நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற இந்த புகழ்பெற்ற நிறுவனம், நெடுஞ்சாலை பொறியியல் துறையில் தொடர்ந்து ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகிறது. போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சாலைகளின் ஆயுளை மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் குறைக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகிய கருத்துக்களின் அடிப்படையில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தும் நடவடிக்கையாக திட்ட இயக்குநர், சென்னை கன்னியாகுமரி தொழில்தட

Verified RealEstate ™

திட்டம் அவர்கள் தலைமையில் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பொறியாளர்களை ஆஸ்திரேலியாவிலுள்ள உலக புகழ் பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஜூன்–2025–இல் அறிவுசார் பயணமாக அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வரும் ஆராய்ச்சிப் பணிகள்;

- களிமண்ணின் நிலைத்தன்மையை மேம்படுத்த ஜியோபாலிமர்கள் பயன்படுத்துதல் தொடர்பான ஆய்வு.
- அடர்த்தியான நிலக்கீல் அடுக்குகளின் (DBM) சேர்க்கைகளில் புதிய கலவைகள் உருவாக்குவதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.
- T–வடிவ சந்திப்பினை போக்குவரத்து சமிக்ஞையுடன் மேம்படுத்துவதற்கான ஆய்வு.

- சுயமாக இறுகும் கற்கலவையின் (Self–Compacting Concrete) கலவை விகித சாரங்கள் மற்றும் அதன் செயல்திறன் குறித்த ஆய்வு.

6.2 பரிசோதனைகள்

நிலக்கீல், மண், சரளைக் கற்கள் மற்றும் கற்கலவை போன்ற கட்டுமானப் பொருள்களின் உகந்த தன்மை மற்றும் தரத்தினை மதிப்பீடு செய்வதற்கான பரிசோதனைகள் சென்னையிலுள்ள 4 ஆய்வகங்களிலும் மற்றும் 8 மண்டல ஆய்வகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. மண் பரிசோதனை, இரும்புக் கம்பி சோதனை, கற்கலவை வடிவமைத்தல், நடைபாதை கற்களுக்கான பரிசோதனை, ஆழ்துளைத் தூண்களின் தாங்குதிறனை சோதனை செய்தல், நிலக்கீல் கலவை வடிவமைத்தல், பெங்கல்மென் பீம் சோதனை ஆகிய பரிசோதனைகள், மேற்கூறிய ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. சாலை சந்திப்பு மேம்பாட்டிற்கான தொழில் நுட்ப

Verified RealEstate ™

கருத்துக்களை போக்குவரத்து ஆய்வகம் வழங்கி வருகிறது.

2024–25–ஆம் நிதியாண்டில், ஆய்வகங்களில் 17925 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.16.88 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

6.3 தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள்

1. தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் (TNRIDC) பராமரிக்கப்பட்டு வரும் வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் ஓரகடம் சந்திப்பில் உள்ள சாலை மேம்பாலத்தில் 23.08.2024 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, புனரமைப்பிற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

2. சென்னையில், தில்லை கங்கா நகரில் அமைந்துள்ள சுரங்கப்பாதை புனரமைப்பிற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

Verified RealEstate

3. பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் இணைப்பு சாலையில் அமையவுள்ள பெருவடிகால் பணியில் அடித்தள மண்ணின் தாங்கு திறனை அதிகப்படுத்த தொழில்நுட்பக் கருத்து வழங்கப்பட்டது.

6.4 தரக்கட்டுப்பாடு

சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுமானத்தின் ஒவ்வொரு நிலைகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்வதன் மூலம் தரம் உறுதி செய்யப்படுகிறது. இதற்காக, கோட்ட அளவில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

6.5 பயிற்சி

6.5.1 பயிற்சி மையம்

பயிற்சி நடவடிக்கைகள் ஒரு துறையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு அம்சமாக இருப்பதால், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் தனிப்பயிற்சி மையம் மூலம் இத்துறையில் பணியாற்றும்

பொறியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2024–2025–ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த பயிற்சி திட்டத்தின் (CTP) கீழ் 1381 பொறியாளர்கள் மற்றும் 159 அமைச்சுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6.5.2 தொழில்நுட்ப விரிவுரைகள்

நெடுஞ்சாலைப் பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமையான உத்திகளை வெளிக்கொணரும் வகையில் தொழில்நுட்ப விரிவுரைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. நடத்தப்பட்ட சொற்பொழிவுகளில் சில பின்வருமாறு;

1. கட்டுமானப் பொருட்களின் கழிவினை மறுசுழற்சி செய்து மீண்டும் பயனுறு சரளைக்கற்களாக மாற்றுதல்.
2. பாலம் கட்டுமானத்தில் கட்டுமான இரசாயனங்களின் பங்கு. கற்கலவை

கட்டுமானங்களில் பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பிகள் அரிக்கப்படுவதை (Corrosion) தடுக்கும் தொழில் நுட்பங்கள்.

3. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சாலைகளில் விரைவாக மற்றும் சிறப்பாக அளவீடு செய்யும் நுண்ணறிவு அமைப்பு.

4. செறிவூட்டப்பட்ட கலவைகளை தொழில்துறையில் தற்போதுள்ள தொழில்நுட்பங்களுடன் ஒருங்கிணைத்து பயன்படுத்துதல்.

6.6 இந்திய சாலைகள் குழுமம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர், இந்திய சாலைகள் குழுமத்தின் கவுன்சில் உறுப்பினராகவும், புதிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் அங்கீகாரக் குழு மற்றும் மனித வள மேம்பாட்டுக் குழுவிலும் (ஜி – 2) உறுப்பினராக உள்ளார். இதுவரை, 15 அங்கீகாரக் குழு கூட்டங்களிலும், 6 ஜி – 2 குழுக்கூட்டங்களிலும் தொழில்நுட்ப குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

Verified RealEstate™

பொதுவாக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி முடிவுகள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்திய சாலைகள் குழுமம் அமர்வில் சமர்ப்பிக்கப்படுகின்றன. சட்டிஸ்கர் மாநிலம் ராய்பூரில் நவம்பர் 2024–ல் நடைபெற்ற இந்திய சாலைக்குழுமத்தின் 83–வது வருடாந்திர அமர்வில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த பொறியாளர்கள் பின்வரும் மூன்று தொழில்நுட்ப கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

1. சிமெண்ட் கூழ் கொண்ட நிலக்கீல் கலவையில் (Cement Grouted Bituminous Mix) ஊது உலை கசடு துகள்களின் (Ground Granulated Blast Furnace Slag) செயல்திறன் குறித்த ஆய்வு.

2. அடித்தள மண்ணின் மீயொலி பண்புகளை சிதைவுறா அணுகுமுறை மூலம் புவி தொழில்நுட்ப மதிப்பீடு செய்தல்.

Verified RealEstate™

3. நானோ தொழில்நுட்ப அணுகுமுறையைப் பயன்படுத்தி களிமண்ணை நிலைப்படுத்துதல்.

6.7 இந்திய தர நிர்ணய குழுமம்

நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையத்தின் இணை இயக்குநர் முதன்மை உறுப்பினராகவும், துணை இயக்குநர்–I இந்திய தரநிலைகள் பணியகத்தின் (BIS – Bureau of Indian Standards) PCD 06 (பெட்ரோலியம் மற்றும் நிலக்கரி தொடர்புடைய பொருட்களுக்கான கோட்டம் – நிலக்கீல் மற்றும் நிலக்கீல் தொடர்புடைய பொருட்களுக்கான பிரிவுக் குழு) பிரிவுக்குழுவில் மாற்று உறுப்பினராகவும் உள்ளனர். நிலக்கீல் மற்றும் நிலக்கீல் தொடர்புடைய பொருட்களுக்கான தரநிலைகளை உருவாக்கும் போது கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் வழங்குகின்றனர்.

Verified RealEstate ™

7. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவணம்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் 1998–ஆம் ஆண்டில் நிறுவனச் சட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மற்றும் TIDEL பூங்கா நிறுவனம் இணைந்து 50:50 சம பங்கு விகிதத்தில் கூட்டு நிறுவனமாக இயங்கி வருகிறது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கான மேலாண்மை முகமையாக செயல்பட்டு வருகிறது.

7.1 தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை நிறுவணம் (IT Express Way Ltd) (ITEL)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் இராஜீவ் காந்தி சாலையில், மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையுள்ள சாலையைப் பராமரிக்கிறது. சென்னை நகரின் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதி வழியாக

செல்லும் இப்பிரதான சாலை, இருபுறமும் சேவை சாலைகள் அடங்கிய ஆறுவழித் தடச் சாலையாகும்.

7.2 பயன்பாட்டில் உள்ள திட்டங்கள்

1. அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான கிழக்கு கடற்கரை சாலை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளது.

2. பசுமை வழித்தடத் திட்டமான சென்னை வெளிவட்டச் சாலை, தேசிய நெடுஞ்சாலை – 32–இல் வண்டலூர் முதல் திருவொற்றியூர் – பொன்னேரி –பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூரில் முடிவடைகிறது. இத்திட்டத்தின் மேலாண்மை முகமையாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் செயல்படுகிறது. ரூ.2156.40 கோடி மதிப்பில் இத்திட்டமானது வடிவமைப்பு, கட்டுமானம், நிதி அளித்தல்,

Verified RealEstate ™

இயக்குதல் பராமரித்தல் (DBFOT) அடிப்படையில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Parnership – PPP) அரை ஆண்டு தொகை அடிப்படையில் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

3. தகவல் தொழில்நுட்ப வழித்தடமான இராஜீவ் காந்தி சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சீரான போக்குவரத்தை அமைக்கவும் இச்சாலையில் டைடல் பார்க் சந்திப்பில் ரூ.38.80 கோடி மதிப்பில் கட்டப்பட்ட "U" வடிவ மேம்பாலம் மற்றும் திருவான்மியூர் மேற்கு நிழற்சாலை குறுக்கே நடைமேம்பாலம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 25.02.2025 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

Verified RealEstate™

7.3 நடைபெற்று வரும் பணிகள்

1. கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலை அமைத்தல்

ஆறு வழித்தடச் சாலையாக, திருப்போரூர் புறவழிச்சாலை (7.45 கி.மீ) மற்றும் கேளம்பாக்கம் புறவழிச்சாலை (4.675 கி.மீ) அமைக்கும் பணிகள் ரூ.314.73 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் திருப்போரூர் புறவழிச்சாலை முடிவுற்றது. கேளம்பாக்கம் புறவழிச்சாலைப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

2. சென்னை எல்லை சாலைத் திட்டம் (CPRR)

சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரையிலான பிரிவு–I மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் முதல் பூஞ்சேரி வரையிலான பிரிவு–V ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், திட்ட மேலாண்மை முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

Verified RealEstate™

8. தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகமானது 2005–ஆம் ஆண்டு முற்றிலும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனமாக, சாலை உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள நிறுவப்பட்டது.

8.1 செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

8.1.1 ஓரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம்

1. வண்டலூர் – வாலாஜாபாத் சாலை மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் – திருப்பெரும்புதூர் சாலைகளை 6 வழித் தடச்சாலையாக அகலப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

2. வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில் படப்பையில் ரூ.25.52 கோடி மதிப்பீட்டில்

Verified © RealEstate

நடைபெற்று வரும் மேம்பாலம் கட்டும் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது.

8.1.2 மதுரை சுற்றுச் சாலை

நான்கு வழித் தடச்சாலையாக அகலப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்தின் பொருட்டு, மதுரை சுற்றுச் சாலையில் 8 கி.மீ. நீளத்திற்கு மாற்றுப்பாதை அமைக்க ரூ.40.50 கோடியில் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

8.1.3 சென்னை எல்லை சாலைத் திட்டம்

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் பிரிவுகள் II, III மற்றும் IV–ற்கு மேலாண்மை முகமையாக செயல்பட்டு வருகிறது.

Verified RedIEstate ™

8.1.4 கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கடவு (LC) எண். 47–க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி

மேற்கண்ட பணியானது ரூ.138.27 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரயில்வே மேம்பாலம் சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு IV மற்றும் பிரிவு V–ஐ இணைக்கும் வகையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களால், இந்த இரயில்வே மேம்பாலத்தின் செங்கல்பட்டு – சென்னை பாலப்பகுதி 19.02.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

Verified RedEstate

9. தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையச் சட்டம் 12/2024–இன் படி 2024–ஆம் ஆண்டில், நெடுஞ்சாலைகளின் மேம்பாடு, பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றைத் தனியாரின் பங்கேற்புடன் திறம்பட மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை நிறுவியுள்ளது.

9.1 ஆணையத்தின் அமைப்பு

தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

- **முழு நேர உறுப்பினர்கள்:**
  - தலைவர்,
  - உறுப்பினர் (நிர்வாகம்),
  - உறுப்பினர் (நிதி),
  - உறுப்பினர் (தொழில்நுட்பம்)

Verified RealEstate

- **பகுதி நேர உறுப்பினர்கள்:**

  - அரசு செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
  - முதன்மை அரசுச் செயலாளர் நிதித்துறை,
  - செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை.

9.1.1 செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

பின்வரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

- நெடுஞ்சாலை வளர்ச்சியில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership–PPP) முயற்சிகள்.
- நான்குவழிச் சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகள் அமைத்தல்.

Verified RealEstate ™

- விமான நிலையம், துறைமுகங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான சாலை இணைப்பை மேம்படுத்துதல்.

இது ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கும் வழி வகுக்கும்.

Verified RealEstate™

10. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (சட்டம் 4/1996)– இன் படி, 18.03.1997 முதல் தமிழ்நாட்டிலுள்ள மாநில துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:

- துறைமுக வளர்ச்சியில் போட்டி மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல்
- தனியார் துறை பங்கேற்பினை ஊக்குவித்தல்
- துறைமுகத் திட்டங்களை வணிகரீதியில் சாத்தியமாக்குதல்
- தமிழ்நாட்டின் கடல்சார் வளர்ச்சிக்கு எளிதான அணுகுதலை வழங்குதல், அனுமதிகளை

Verified RedEstate

ஒழுங்குபடுத்துதல் மற்றும் எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவித்தல்.

- துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை ஊக்குவிப்பதற்காக ஒருங்கிணைந்த துறைமுக வளர்ச்சிக்கு வகை செய்தல்.

10.1 கடற்கரை மற்றும் துறைமுகங்கள்

1076 கி.மீ. நீளமுள்ள இரண்டாவது மிக நீளமான கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ள தமிழ்நாடு, கிழக்கில் வங்காள விரிகுடாவையும் மேற்கில் அரபிக்கடலையும் கொண்டுள்ளது. இந்த கடற்கரையில், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட மூன்று பெருந்துறைமுகங்கள் உள்ளன.

1. சென்னை துறைமுகம்
2. காமராஜர் துறைமுகம் (எண்ணூர்)
3. வ.உ.சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி).

10.2 தமிழ்நாட்டிலுள்ள மாநில துறைமுகங்கள்

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அறிவிக்கப்பட்ட மாநில (சிறு) துறைமுகங்கள் பின்வருமாறு:–

அரசுத் துறைமுகங்கள்	தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்
1. கடலூர் 2. நாகப்பட்டினம் 3. பாம்பன் 4. இராமேஸ்வரம் 5. கன்னியாகுமரி 6. குளச்சல்	1. காட்டுப்பள்ளி 2. எண்ணூர் சிறுதுறைமுகம் 3. பனையூர் 4. திருச்சோபுரம் 5. சிலம்பிமங்கலம் 6. பரங்கிப்பேட்டை 7. பி.ஓய் 03 எண்ணெய் வளப்பகுதி 8. திருக்கடையூர் 9. திருக்குவளை 10. உடன்குடி 11. கூடங்குளம்.

Verified RealEstate

128 A



மாண்புமிகு அமைச்சர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் "ஒரு டிரில்லியன் டாலராக" உயர்த்த நெடுஞ்சாலைத்துறையின் பங்களிப்பு குறித்த கருத்தரங்கை 05.03.2025 அன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

Verified by TN E-State ™

10.3 தமிழ்நாடு மாநில துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை, 2023

2007–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசின் சிறு துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கையின்படி தமிழ்நாட்டின் கடலோரத்தில் உள்ள சிறு துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டன. கடந்த 20 ஆண்டுகளில் பல்வேறு புதுமையான துறைமுக மேம்பாட்டு முறைகள் பிற கடலோர மாநிலங்களில் உருவாகியுள்ளன.

15.11.2023 அன்று, சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கி புதுப்பிக்கப்பட்ட "மாநில துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை, 2023", அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தப் புதிய கொள்கை பொது மற்றும் தனியார் பங்களிப்புத் திட்டங்களுக்கு (Public Private Partnership–PPP) நெகிழ்வான அணுகுமுறை, துறைமுக மேம்பாட்டிற்கான எளிதான அணுகல் மற்றும் சாகச நீர் விளையாட்டு, கடலோர கப்பல்

Verified RealEstate™

போக்குவரத்து, திறன் மேம்பாடு மற்றும் நிலையான துறைமுக மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

10.4 செயல்பாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் இயக்கம்

10.4.1 அரசுத் துறைமுகங்கள்

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
1.	கடலூர் துறைமுகம்	தமிழ்நாடு கடல்சார் வாரியம் மற்றும் ஒன்றிய அரசின் சாகர்மாலா திட்ட நிதியுதவியுடன் திறந்த வெளி நங்கூரத் துறைமுகம் உருவாக்கப்பட்டு, இத்துறைமுகத்தை பொது மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

Verified RealEstate ™

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
2.	நாகப்பட்டினம் துறைமுகம்	i) திறந்த வெளி நங்கூரத் துறைமுகத்தின் மூலம் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. ii) பன்னாட்டு பயணிகள் கப்பல் போக்குவரத்து இந்தியாவின் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு 14.10.2023 அன்று துவக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.
3.	பாம்பன் துறைமுகம்	சிறுகப்பல்கள் / கலங்களுக்கு கிழக்கு – மேற்கு கடலிணைப்பாக விளங்கக்கூடிய பாம்பன் கால்வாயில், வழிகாட்டும் பணிகள் செய்யப்படுகிறது

Verified RealEstate

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
4.	இராமேஸ்வரம் துறைமுகம்	i) அக்னி தீர்த்தம் பகுதியில் குறுகிய தூரத்திற்கான பயணிகள் படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது. ii) இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) சென்னை, இராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் தலைமன்னார் (ஸ்ரீலங்கா) இடையே பயணிகள் படகுப்போக்குவரத்தை மீளத் துவக்குவதற்காக, துறைமுகம் மற்றும் பயணிகள் முனைய உள்கட்டமைப்புகளை இராமேஸ்வரத்தில் உருவாக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.
5.	கன்னியாகுமரி துறைமுகம்	பயணிகள் படகுப் போக்குவரத்து துறைமுகமான இத்துறைமுகத்தில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன்

Verified RealEstate

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
		திருவள்ளுவர் சிலைக்கும், இடையே படகுப் போக்குவரத்து, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகிறது.

10.4.2 தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் / முனையங்கள்

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
1.	காட்டுப்பள்ளி துறைமுகம்	கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பாகம் புனையும் பணிகள் லார்சன் அன்ட் டூப்ரோ லிமிடெட் (L&T) நிறுவனத்தால் மேற் கொள்ளப்படுகிறது. மரைன் இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால்

Verified RedEstate

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
		சரக்கு பெட்டகங்கள் மற்றும் இதர சரக்கு ஏற்றுமதி / இறக்குமதி செய்யப்படுகிறது.
2.	எண்ணூர் சிறு துறைமுகம்	பன்முனை நங்கூர மிதவை அமைப்புகள் மூலம் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்படுகிறது.
3.	கடலூர் துறைமுகத்திற்குள் அமைந்துள்ள கெம்ப்ளாஸ்ட் கடல் முனையம்	தீவுத் தோணித்துறை மூலம் வினைல் குளோரைடு மோனோமர் இறக்குமதி செய்யப்படுகிறது.
4.	திருக்கடையூர் துறைமுகம்	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 330 மெகாவாட் மின் நிலையத்திற்கு ஒரு முனை நங்கூர மிதவை மூலம் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

Verified RealEstate

வ. எண்	துறைமுகம்	செயல்பாடு
5.	கூடங்குளம் துறைமுகம்	கூடங்குளம் அணுமின் உலைகள் 3,4,5 மற்றும் 6–க்கான இயந்திரங்கள் / பிரம்மாண்டமான தளவாடங்கள் உருட்டி ஏற்றுதல் – இறக்குதல் தோணித்துறையின் மூலம் கையாளப்படுகிறது

இதர அறிவிக்கப்பட்ட மாநில சிறுதுறைமுகங்கள், சட்டபூர்வ அனுமதிகள் பெறுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

10.5 வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள்

10.5.1 கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் துறைமுகம், விரிவாக்கப்பட்ட அலை தடுப்பு சுவர்கள், புதிய தோணித்துறைகள் மற்றும் தூர்வாரப்பட்ட கால்வாய் போன்ற அடிப்படைக்

கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தை இயக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் பொது மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் துறைமுக இயக்குபவரைத் தேர்ந்தெடுக்க ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடைபெற்று வருகிறது.

10.5.2 கன்னியாகுமரி துறைமுகம்

திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினர் கன்னியாகுமரியில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், கரையிலிருந்து பயணிகள் படகுப் போக்குவரத்தினை நடத்தி வருகின்றனர். இப்படகுப்போக்குவரத்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

10.5.2.1 விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத்துறை நீட்டிப்பு செய்தல்

சுற்றுலா பயணிகளைக் கையாளும் திறனை அதிகரிக்கும் நோக்கில், விவேகானந்தர் பாறை நினைவகத்தில் உள்ள தோணித்துறையை 100 மீட்டர்

வரை நீட்டித்து ஒரே நேரத்தில் 3 படகுகளை நிறுத்தக்கூடிய வகையில் ஒன்றிய அரசின் ரூ.10 கோடி நிதியுதவியுடன் பொதுப்பணித்துறையால் (PWD) செயல்படுத்தப்படுகிறது. மேலும், இக்கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

10.5.2.2 விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் பாதசாரிகள் கடல்சார் கண்ணாடி பாலம்

விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறையையும் இணைத்து பாதசாரிகள் பாலம் அமைக்க 2016–இல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் இப்பணி தடைப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களின் தொடர் முயற்சியால், விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் சிறப்புமிக்க நவீன பாதசாரிகள் கடல்சார்

கண்ணாடி பாலம் 72 மீ நீளம் மற்றும் 10 மீ அகலத்தில் திட்டமிடப்பட்டு ரூ.37 கோடி மதிப்பீட்டில் 15.02.2023 அன்று பணிகள் துவங்கப்பட்டன. இப்பணி நெடுஞ்சாலைத்துறை மூலம் ஒன்றிய அரசின் சாகர்மாலா திட்டத்தின் கீழ் 50 சதவீத நிதியுதவியுடன் செயலாக்கப்பட்டது. உலகச் சுற்றுலாப் பயணிகள் வியக்கத்தக்க வகையில், அமைக்கப்பட்ட இந்த கடல்சார் கண்ணாடி பாலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2024 அன்று அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

10.5.3 உடன்குடி துறைமுகம்

உடன்குடியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால், 1320 மெகாவாட் அதிசக்தி திறன் வாய்ந்த அனல்மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை கையாளுவதற்காக 8 கிலோமீட்டர் நீளம் கொண்ட திறந்தவெளி தோணித்துறை கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகள்

மே–2025–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10.5.4 பல்வேறு இடங்களில் அமைக்கப்படவுள்ள மிதக்கும் தோணித்துறைகள்

தமிழ்நாடு கடல்சார் வாரியம், இராமேஸ்வரத்தில் மிதக்கும் தோணித்துறைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும் மற்றும் சாகர்மாலா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடனும், இப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

10.6 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தில் 6 மாத கால பொது முறை தங்கிப் பயிலும் மாலுமி பயிற்சி (General Purpose Rating) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, 42 பிரிவுகளில் மொத்தம் 1680 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். கப்பல் போக்குவரத்து தலைமை

இயக்குநரகத்தின் அங்கீகாரம் பெற்ற கீழ்க்கண்ட படிப்புகளும் நடத்தப்படுகின்றன. இவை இந்திய மற்றும் வெளிநாட்டுக் கப்பல்களில் அதிக வேலைவாய்ப்பைக் கொண்டுள்ளன.

1. தன்னிலை பாதுகாப்பு உத்தி (Personal Survival Techniques)
2. கடலில் முதலுதவி செய்தல் (Elementary First Aid)
3. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (Personal Safety and Social Responsibility)
4. எண்ணெய் மற்றும் இரசாயனக் கப்பல் சரக்கு கையாளுதல் (Oil & Chemical Tanker Cargo Operations)
5. தீயணைப்பு அடிப்படை பாதுகாப்பு பயிற்சி (Fire prevention and Fire Fighting)
6. கடல் மாலுமிகளுக்கான பாதுகாப்பு பயிற்சி (Security training for seafarers)

Verified RedEstate ™

10.7 2024–25–ஆம் ஆண்டில் வாரியத்தினால் கையாளப்பட்ட சரக்குகள் மற்றும் வாரியத்தின் வருமானம்.

2024 – 2025 –ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2024 முதல் டிசம்பர் 2024 வரை) மாநில துறைமுகங்கள் வாயிலாக 87,66,017 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, தமிழ்நாடு கடல்சார் வாரியம், தோராயமாக ரூ.61 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது.

Verified RealEstate™

11. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம், 1956–இன்படி தமிழ்நாடு மின் உற்பத்திக்குத் தேவைப்படும் நிலக்கரியை எடுத்து வருவதற்காக நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசின் நிறுவனமாகும். மேலும், இக்கழகமானது, சுற்றுலா பயணிகளுக்காக கன்னியாகுமரியில் படகுப் போக்குவரத்தினையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் 9 இயக்குநர்களுடன் செயல்படுகிறது. தற்போது, வாரியமானது அரசு துறைகள் மற்றும் TANGEDCO நிறுவனத்திலிருந்து 8 இயக்குநர்கள் மற்றும் ஒரு தன்னிச்சை இயக்குநர் ஆகியோர்களை கொண்டுள்ளது.

Verified RealEstate

11.1 செயல்பாடுகள்

11.1.1 தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வருதல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் (NTECL) வல்லூர், சென்னையில் அமைந்துள்ள ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன்படைத்த 3 அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி முழுவதையும் பாரதீப்/ காக்கிநாடா மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்திற்கு கடல் வழியாக எடுத்து வரப்படுகிறது.

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் நிலக்கரியின் அளவு மின் உற்பத்திக்கான நிலக்கரி ஒதுக்கீட்டைப் பொறுத்து மாறுபடுகிறது. தேவையின் அடிப்படையில், தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு நிலக்கரியை எடுத்துச்

செல்வதற்காக 2024–25–ஆம் ஆண்டில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 4 கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

இக்கழகத்தில் கடந்த 3 ஆண்டுகளின் செயல்திறன் மற்றும் நிதிநிலை செயல்பாட்டு விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களில் வந்து சேர்ந்த நிலக்கரியின் அளவு	எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு	மொத்த வருவாய்	நிகர லாபம்	ஈவுத் தொகை
	(மெட்ரிக் டன் இலட்சத்தில்)		(ரூ. இலட்சத்தில்)		
2022–23	79.36	75.39	42121.52	(–) 2867.33	–
2023–24	60.16	56.25	34589.51	404.91	121.47
2024–25*	70.70	66.21	21223.40	200.00	–

*எதிர்நோக்கப்பட்ட மதிப்பீடு

Verified RealEstate ™

சேவைக் கட்டணம்

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வரும் பணிக்கான சேவைக் கட்டணமாக, வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் வாடகைக் கட்டணத்தில் 5 விழுக்காடு பெறப்படுகின்றது.

11.1.2 கன்னியாகுமரியில் பயணிகள் படகு போக்குவரத்து சேவை

இக்கழகமானது, சுற்றுலாப் பயணிகளுக்காக கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை, அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் வட்டக்கோட்டைக்குப் பயணிகள் படகுப் போக்குவரத்தினை நடத்தி வருகிறது. தற்பொழுது, பயணிகள் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு படகிலும் 150 இருக்கைகள் கொண்ட எம்.எல்.குகன், எம்.எல்.பொதிகை மற்றும் எம்.எல்.விவேகானந்தா ஆகிய மூன்று படகுகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், எம்.எல்.தாமிரபரணி மற்றும் எம்.எல்.திருவள்ளுவர் ஆகிய இரண்டு புதிய படகுகள்

24.05.2023 முதல் வட்டக்கோட்டைக்கு இயக்கப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கன்னியாகுமரி படகுத்துறைக்காக மூன்று புதிய படகுகள் வாங்கப்படவுள்ளதாகவும், அந்த மூன்று படகுகள் கீழ்க்கண்டவாறு பெயரிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அவையாவன;

- கே. காமராஜர்,
- மார்ஷல் நேசமணி,
- ஜி.யு. போப்.

மேற்கண்ட 3 படகுகளின் கட்டுமானத்திற்கான வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

Verified RedEstate

பயணிகள் போக்குவரத்து

படகுத்துறையின் வாயிலாக 2023–24–ஆம் ஆண்டு ரூ.520.06 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

கன்னியாகுமரி படகுத்துறையின் கடந்த மூன்று ஆண்டுகளின் செயல்திறன் மற்றும் நிதிநிலை செயல்பாட்டு விவரங்கள் பின்வருமாறு;

ஆண்டு	பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மொத்த வருவாய் (ரூ. இலட்சத்தில்)	இலாபம் (ரூ. இலட்சத்தில்)
2022–23	21.36	1371.02	333.47
2023 – 24	21.31	2005.03	520.06
2024 – 25 *	20.53	2480.28	931.13

* எதிர்நோக்கப்பட்ட மதிப்பீடு.

Verified RealEstate

11.2 2025 –26 –ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

இந்நிறுவனம் 2025–26–ஆம் ஆண்டில் என்.டி.இ.சி.எல் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்காக வாடகைக் கப்பல்கள் மூலம் சுமார் 70 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை எடுத்து வர உத்தேசித்துள்ளது.

Verified RealEstate™

12. முன்னெடுப்புகள்

ஒன்றிய அரசின் சில பெரும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி வருகிறது. திட்டங்களை திறம்பட செயல்படுத்தவும், குறித்த காலத்தில் முடிக்கவும் இதர சிறப்பு முயற்சிகளும் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12.1 பெரும் திட்டப் பணிகள்

1. **சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர் மட்டச்சாலை (இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்)**

   இப்பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் 23.11.2023 அன்று துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை விரைந்து முடிக்க ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

Verified RedEstate

2. **செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரையிலான சாலையை நான்கு வழித்தடத்திலிருந்து ஆறு வழித் தடச்சாலையாக மேம்படுத்துதல் (இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்)**

செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரை ஆறு/எட்டு வழித் தடச்சாலையாக அகலப்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3. **தே.நெ.49–இல் இராமநாதபுரம் –இராமேஸ்வரம் – தனுஷ்கோடி பிரிவு நான்கு வழித்தடச்சாலை அமைத்தல் (மாநில தே.நெ. அலகு)**

இராமநாதபுரம் முதல் மண்டபம் வரை (தொகுப்பு–2) விரிவான திட்ட அறிக்கை (நில எடுப்பு உட்பட) தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மண்டபம் முதல் இராமேஸ்வரம் வரை (தொகுப்பு–3) விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

Verified by RealEstate ™

13. வரவு செலவு திட்ட மதிப்பீடு

நீடித்த, அனைத்து பருவநிலைகளுக்கும் ஏற்ற சாலை உள்கட்டமைப்பை ஏற்படுத்த, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது. சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றின் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2025–26–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

வ. எண்.	திட்டங்கள்/பணிகள்	வரவு செலவு திட்ட மதிப்பீடு 2025–26 (ரூ. கோடியில்)
(அ)	**மூலதன தலைப்பு**	
1	**தேசிய நெடுஞ்சாலைகள்**	
	புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி	166.21
	மூலப் பணிகள்	0.93
2	**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு**	
	ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்	9412.64

வ. எண்.	திட்டங்கள்/பணிகள்	வரவு செலவு திட்ட மதிப்பீடு 2025–26 (ரூ. கோடியில்)
	நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகள்	21.50
	புறவழிச்சாலைகள் அமைத்தல் மற்றும் நில எடுப்பு	366.17
	நகரப் பகுதிகளில் போக்குவரத்து மேம்பாடு	363.62
	இதரப் பணிகள்	13.77
	தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்	20.52
	தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்	672.89
	சென்னை எல்லை சாலைத் திட்டம்	2910.00
	சென்னை கன்னியாகுமரி தொழில்தட திட்டம்	633.00
3	**திட்டங்கள்**	
	ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்	63.02
	உயர்மட்ட மேம்பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள் / புறவழிச்சாலை பணிகள்	314.89
	இரயில்வே மேம்பாலங்கள்/ இரயில்வே கீழ்ப்பாலங்கள்/ உயர்மட்ட சாலைகள்	813.22
	சாலைப்பணிகள்	21.45

வ. எண்.	திட்டங்கள்/பணிகள்	வரவு செலவு திட்ட மதிப்பீடு 2025–26 (ரூ. கோடியில்)
4	**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II**	190.02
5	**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்**	
	ஊராட்சி ஒன்றிய/ ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்	606.13
	நபார்டு நிதியின் கீழ் உயர்மட்டப் பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள்	279.46
	புறவழிச்சாலைகள்	93.98
6	**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டப் பணிகள்**	745.56
மொத்த திட்டப் பணிகள்		17708.98
7	**இதரப் பணிகள்**	
	சாலைகள் மற்றும் பாலங்கள் திட்டப் பணிகளுக்கான ஆய்வு/மதிப்பீடு	5.00
	விரிவானத் திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான சுழல்நிதி	20.38
	கணக்குகளிடையே மாற்றம்	463.03
	மூலதன தலைப்பு மொத்தம்	18197.39
(ஆ)	**வருவாய் தலைப்பு**	**2523.26**
(இ)	**கடன்**	**1.00**
	மொத்தம்	**20721.65**

Verified by RealEstate™

பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சியால் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் ஆகியவை நெடுஞ்சாலைத் துறையின் திறனான கட்டமைப்பின் வாயிலாக பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. மாநிலத்தின் சமச்சீரான சமூகப் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு இத்துறையின் அனைத்து வளங்களும் முழுமையாக ஒருங்கிணைத்து, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எ.வ. வேலு
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள்
மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்

Verified RealEstate™

Verified RealEstate™

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.